# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம்௵ மேமீ 28௳ திங்கட்கிழமை [நெ. 249


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXLIX.

## புதுக்கோட்டை மகா-ா-ா-ஸ்ரீ மாட்சிதங்கிய மன்னர்பிரான் அவர்கள் ஐரோப்பிய யுத்த முடிவு வெற்றி தினக்கொண்டாட்டத்தின்போது டவுன் ஹாலில் 14—5—45௳ திங்கட்கிழமை ஆற்றிய சொற்பொழிவு.

சீமாட்டிகளே, சீமான்களே,

இந்த மகத்தான சம்பவத்தைக் கொண்டாடுவதில் உங்களுடன் கலந்து கொள்வதிலும், நமக்கு இந்த வெற்றியை அளித்த கடவுளுக்கு என்னுடைய பக்திபூர்வமான வந்தனத்தைச் செலுத்துவதிலும் நான் சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லத் தேவையில்லை. ஆகிலும் குதூகலப்படும் இத்தருணத்தில் முறியடிக்கப்பட வேண்டிய மற்றொரு சக்திவாய்ந்த எதிரி பாக்கியிருக்கிறானென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பூரணமான வெற்றி கிடைக்கும் வரையில் நம்முடைய முயற்சியை தளர்ச்சி செய்யக் கூடாதென்று நான் வற்புறுத்துகிறேன்.

2. மிகப்பெரிய ராஜதந்திரியான ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவருடைய அபாரமான முயற்சிக்குக் கிடைத்த பலனை அனுபவிக்க ஜீவித்திருக்கவில்லையே என்பது வருந்தத்தக்கது. மனிதபலமும் தளவாடங்களும் அனுப்பி அமெரிக்கா செய்த மதிக்கத்தகாத உதவிக்கும் ஆதரவுக்கும் நாம் செய்நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை நாம் ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியாது. இந்த வெற்றியை சம்பாதிக்க ருஷ்யசேனை எடுத்துக்கொண்ட பங்கையும் மதித்துப் பார்க்காமலிருக்க முடியாது.

3. யுத்தத்தின் அனேக சம்பவங்களையும் நேசதேசப்படைகளின் அபூர்வமான தீரச்செய்கைகளையும் எடுத்துரைக்க நான் உத்தேசிக்கவில்லை. ஆகிலும் ஒரு சிறிய அளவாகயிருந்தாலும் யுத்த முயற்சிக்கு நாம் செய்திருக்கும் பேருதவியைப்பற்றி

நாம் திருப்தியடைவதற்கு முகாந்திரங்களிருக்கின்றன என்றுசொன்னால் அது தகுதியற்றதாக இருக்காது. சமஸ்தானத்தின் பூரா ஐஸ்வர்யங்களும் பூர்ண வெற்றி அடைவதற்காக மாட்சிதங்கிய ராஜ-சக்கரவர்த்தியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன என்பதை எல்லோரும் அறிவார்கள். என்னுடைய வேண்டுகோளுக்கு என்னுடைய பிரஜைகள் யாதொரு மனத்தாங்கலன்னியிலும் அனுவாதம் செய்தார்களென்பதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். எதிர்காலத்திலும் இவ்விதமான உதவியை எதிர் பார்க்கலாமென்று நான் நம்பிக்கை கொள்ளுகிறேன்.

4. யுத்தமென்பது கோரமானது, மனித இயல்பற்றது. இந்த யுத்தத்தின் மூலம் இந்திய சேனையின் தீரமுள்ள சேவையானது மற்றெந்த சேவைக்கும் குறைவானதல்லவென்று உலகத்தாருக்கு நிர்சனமாக வெளிப்படுத்த இந்தியாவுக்கு சந்தர்ப்பம் வாய்த்தது.

5. நமக்கு வெற்றிக்கு ஒற்றுமைதான் முக்கிய காரணம். யுத்தத்தை விட மிகப் பெரிய பிரச்னையான சமாதானத்தை நிறுவுவதிலும் இந்த ஒற்றுமை நிலைபெற வேண்டுமென்று நாம் பிரார்த்திப்போம்.

6. ஜப்பான் நொருக்கப்பட்டு பூர்ணமாக வெற்றி கிடைக்கும் வரையிலும் நமது யுத்த முயற்சியை தளர்ச்சி செய்யக்கூடாதென்றும், அதிக தீவிரமாக முயற்சி செய்து வரவேண்டுமென்றும், நான் கூடிய சீக்கிரம் எல்லோருக்கும் சமாதானமும், சந்தோஷமும் ஏற்படவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்யும்படிக்கும் மறுமுறை வேண்டிக்கொள்கிறேன்.

7. ஐரோப்பியப்போரில் சேவை செய்த இந்தியத்துருப்புகளுக்கு வசதி அளிப்பதற்காக வைஸ்ராயின் நிதிக்கு ரூ. 10,000 நன்கொடையளிப்பதாக நான் சந்தோஷத்துடன் வெளியிடுகிறேன்.

---

# வெற்றி பெற்றதற்காக மன்னர்பிரானை பார்லிமெண்ட் பாராட்டுகிறது.

## *மிஸ்ட்டர் சர்ச்சிலின் பிரசங்கம்.*

நமது எல்லா ஆயுதப்படைகளுக்கும் அதிபதி மன்னர்பிரான்தான். சக்திக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு பிரஜைகள் எல்லாவிதமான உத்தியோகங்களிலும், நிலயங்களிலும் பலவிதமாக வெளிகாட்டிய பிரிடிஷ் யுத்த முயற்சிக்கும் அவர் ஒரு சின்னமாக இருக்கிறார்.

வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் நிறைவேற்றப்பட்டபின் சுயவாக்ஷிபெற்ற குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையேயுள்ள பிணைப்பு மன்னர்தான்.

அவர் நிலமை இன்றைய உலகத்திலும், சரித்திரத்திலும் நிகரற்றது. அவர் பிரிடனுக்கு மட்டுமே அரசராக இல்லை. சாம்ராஜ்யத்தின் இதர பகுதிகளுக்கும் அவர்தான் சக்கிரவர்த்தி. அகில பிரிடனும் வடக்கு அயர்லாந்தும் இதில் ஒரு அங்கத்தினர்கள்.

சாம்ராஜ்யத்திலுள்ள மற்றெல்லா நிர்வாகங்களும் அவரையே தங்கள் மன்னராகக் கருதி அவரிடம் விசுவாசமும், சமமான உரிமையையும் காட்டிவருகின்றனர். இந்த நிர்வாகங்கள் இந்தச்சபையின் அதிகாரத்தைக் கொஞ்சம்கூட சகிக்கமாட்டார்கள். அப்பேர்ப்பட்டவர்களும், பிராசினமான, கியாதிபெற்ற ஸ்தானமான பிரிட்டிஷ் மன்னரிடம் விசுவாசம் காட்டுவதில் நம்முடன் போட்டிபோடுவார்கள்.

### மன்னர் என்ற சிறந்த பிணைப்பு.

உலகத்திலுள்ள அநேக நாடுகளையும் ஜாதியார்களையும் பிணைப்பது மன்னர் என்ற சிறந்த வட்டாரம்தான். இந்தச் சின்னம்தான் பலரை நாட்டைவிட்டு வெகுதூரம் சென்று போர் புரிந்து உயிர்துறக்கவும் குறிப்பான சில லக்ஷியங்களுக்காக சொத்து, சுகங்களைவிட்டுச்

செல்லவும், அவர்களிடம் அனுதாபத்தையும், மனதில் உணர்ச்சியையும் உண்டுபண்ணிற்று. அந்த சக்திகளை அக்கிரமப்போருக்கும் தேசங்களைப் பிடிப்பதற்கும் அல்லது ஆடம்பரத்திலும் பிரயோகம் செய்திருந்தால் இந்த நவீன உலகத்தில் கெடுதல்கள் சம்பவித்திருக்கும். ஒரு ஆபத்தான சமயத்தில் மதிப்பிடமுடியாத பலமுள்ள ஒரு எதிரியை எதிர்க்க பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகள் ஒன்றுசேர்ந்து கௌரவத்தை சம்பாதிப்பது போன்ற சிறப்பு வேறில்லை. அவர்கள் கௌரவத்துக்காகப் போர்புரிந்து வெற்றி பெருவதென்பதும் சிறப்புத்தான்.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நாம் நம் யாவரையும் பிணைத்துவைக்கும் மன்னர் ஆக்ஷியிடமும், அங்கு வீற்றிருக்கும் மன்னரிடமும் நமது பூரண விசுவாசத்தை ஒரு தீர்மான ரூபமாகக் காட்டவேண்டியது சம்பிரதாயமாகிறது.

## இரண்டு சிறந்த குணங்கள்.

இந்த மிகவும் முக்கியத்வமுள்ள பதவியில் அளவிடமுடியாத தேசபக்தியும், மக்களிடம் அதிக அன்பும், பார்லிமெண்டரி முறைகளில் அதிக அனுபவமும்கொண்ட ஒருவர் இருப்பது நம் அதிர்ஷ்டமேயாகும். மன்னரின் உரிமைகள் பிரஜைகளின் உரிமைகளாகிவிட்டன வென்றே நன்கு சொல்லலாம்.

ஆரும் ஜார்ஜ் மன்னரின் உண்மையான பிரீதியும், அரசியலமைப்பிலுள்ள விசுவாசமும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலும், குடியேற்ற நாடுகளிலுமுள்ள ஒவ்வொருவரிடமும் காணப்படு கிறது. அவருடைய திடமும், எளிய வாழ்க்கையும், கடமையிலுள்ள சோர்வற்ற பற்றுதலும் அவரை மக்கள் மேலும் நேசிக்கும்படி செய்கின்றன.

நான் இங்கு ஒரு உதாரணம கூறுகிறேன். இதுவரை இந்த யுத்தத்தில் செய்த சேவைக்காக 92,000 பேருக்குக் கௌரவ அடையாளங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதில் 37,000 பேர்களுக்கு அவர்களுக்குரிய கௌரவத்தை மன்னரே வழங்கியிருப்பது குறிப்புக்குறியதாகும்.

சமாதானத்திற்கும், நாட்டின் சுபிக்ஷத்திற்கும் உரிய எல்லா வேலைகளையும், யுத்தத்தை நடத்துவதற்காக வேலைகளையும் அவரும் அவர் குடும்பத்தாரும் செய்துவந்தார்களென்பதை உலகத்தில் யுத்த முயற்சியில் ஈடுபட்ட எல்லா ஜனங்களும், முக்கியமாக வெடிகுண்டு வீச்சுக்குட்பட்ட பிராந்தியங்களிலுள்ள எல்லோரும், பாராட்டி வந்திருக்கிறார்கள்.

அவர் ஆகாயத்தில் தமக்குண்டாகக் கூடிய ஆபத்தைப் பொருட்படுத்தாமல் யுத்தகளத் திற்கு அடிக்கடி விஜயம்செய்து வந்திருக்கிறார். இந்த சமயத்தில் அவர் சென்ற மகாயுத்தத் தில் 1916-ம் வருஷத்தில் ஜட்லண்ட் போரில் பங்கெடுத்துக்கொண்டதையும் நாம் மறக்கக் கூடாது.

## ராணியின் அழகான புன்சிறிப்பு.

மன்னருடன் கூடவே இருந்துவந்த ராணியாரைப்பற்றிக் குறிப்பிடாமல் மன்னரின் குணாதிசயங்களையே எடுத்துச்சொல்லுவது முற்றிலும் பொருத்தமாகயிராது. அவர் கஷ்ட மும், நாசமும் காணப்படும் அநேக இடங்களுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும், முதல் நாள் வெடி குண்டு வீச்சினால் சேதமுற்ற இடங்களுக்கும், உற்றாரை இழந்தவர்களிடமும், கஷ்டப்படு கிறவர்களிடமும், காயம்பட்டவர்களிடமும் சென்றிருக்கிறார். அவரது அன்புததும்பும் புன்முறுவலே பலர் பூர்ண சுகமடைந்ததற்கு உதவியாக இருந்தது.

என்னைப்போல் இதுவரை எந்த பிரதம மந்திரிக்கும் மன்னர் இவ்வளவு அன்பையும் உத் சாகத்தையும் காண்பிக்கவில்லை என்று நினைக்கிறேன். பிரதிவாரமும் நான் பேட்டிகாண்பது வழக்கம். இருவரும் சிற்றுண்டி அருந்திக்கொண்டே சம்பாஷித்துவந்திருக்கிறோம்.

எங்களுடைய மகத்தான அனுபவத்தில் நான் மன்னருடன் நெருங்கிப்பழகி அவரது இயல்புகளைக்கூர்மையாக கவனித்து வந்திருக்கிறேன். நிர்வாகத்தின் ஆரம்ப மாதங்களில் அவர் கைத்துப்பாக்கியையும், டாமித் துப்பாக்கியையும் சுட பக்கிங்காம் அரண்மனையின் தோட்டத்தில் அவர் பழக்கம் செய்துவிட்டு வருவார். ஒரு சமயத்தில் சாத்தியமாகத் தோன்றிய பிரகாரம் நாம் லண்டனில் நிலைபெற்றுப் போராடவேண்டியிருந்திருந்தால்

அவர் மந்திரிகளின் ஆலோசனையை உதறித்தள்ளிவிட்டு, அரசியல் முறைக்கு மாறுக நடந்து கொண்டிருப்பார் என்பது நிச்சயம்.

நாம் தேசீய கீதத்தைப் பாடுவது அர்த்தமற்ற சம்பிரதாயம் அல்ல. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் கொள்கைகளுக்கு இருப்பிடமாகவும், நாம் இந்த யுத்தத்தில் சம்பாதித்த வெற்றிகளுக்கும் உச்சஸ்தானத்தில் மன்னர் தம்பதிகள் இருப்பது மிகவும் பொருத்தமானதே யாகும். நான் சொல்லவேண்டியது ஒன்று பாக்கியுள்ளது. எந்த நாடும் அதற்கேற்ற சர்க்காரைப் பெறுகிறது எனக்கூறுவது உண்மையென்றால் நாம் சந்தோஷப்படக்கூடிய நிலமையிலிருக்கிறோம். நாமும் நமது முன்னோர்களின் தீர்க்க திருஷ்டியை வாழ்த்தி பலர் பொறுமைப்படும் நிலமையில் நாம் இருப்பதற்காக மகிழ்ச்சிகொள்ளவேண்டும். உலகத்திலேயே சக்தி மிகுந்த பார்லிமெண்ட் நம் நாட்டில்தானிருக்கிறது. மன்னருக்கும் பார்லிமெண்டுக்கும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்மூலம் பூரணமான ஆதரவு உண்டு. இந்த அமைப்பு சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் ஒத்துழைத்து வந்திருக்கிறது. ஆகையால் இந்த சமயத்தில் தீர்மானத்தில் கண்ட பிரகாரம் நமது மனப்பூர்வமான வந்தனத்தை அவருக்குச் செலுத்தவேண்டும். இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 15—5—45 (செவ்வாய்க்கிழமை). | சீனர்கள் செங்ஸியனை திருப்பிப் பிடித்தார்கள். |
| 19—5—45 (சனிக்கிழமை). | நேசதேசப்படைகள் ஜெர்மன் படைகளை நிராயுதபாணிகளாக்குகின்றன. |
| 20—5—45 (ஞாயிற்றுக்கிழமை). | மலாக்கா ஜலசந்தியில் கடற்படைப் போரில் ஜப்பானியர்களுக்குத் தோல்வி ஏற்பட்டது. |
| 21—5—45 (திங்கட்கிழமை). | ஐரோப்பாவில் போர்புரிந்த அமெரிக்க 1-வது சேனை பசிபிக் பிராந்தியத்துக்கு புறப்பட்டது. |
| 23—5—45 (புதன்கிழமை). | சர்ச்சில் தலைமையில் இருந்த கூட்டு நிர்வாகம் கலைக்கப்பட்டது. இடைக்கால ஸர்க்காரை சர்ச்சில் அமைக்கிறார். |

## (B)-செய்திச் சுருக்கம்.

பசிபிக்.—

(1) ஆகினவா.—(ரையூகியூஸ்) தலைநகரமான நாஹாவும், யோயுபாரு என்ற விமான தளமும் பிடிபட்டன.

(2) லூஸான்.—(பிலிப்பைன்ஸ்) ஐபோ அணையும், பாலட் கணவாயும் பிடிபட்டன.

(3) மிண்டானோ.—(பிலிப்பைன்ஸ்) வாலன்ஷியா விழுந்தது. தீவின் 90 சத விகிதம் சுத்தி செய்யப்பட்டது.

(4) தாரகான்.—(போர்னியோ) ஆஸ்திரேலிய முன்னேற்றம் நடைபெறுகிறது. டச்சுத் துருப்புகள் அங்கு இறங்கிவிட்டன.

**ஜப்பான்.**—(1) சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் நாகோயா, டோக்கியோ பேரில் குண்டுகளைப் போட்டன.

(2) நேசதேசக் கடற்படை ஜப்பானின் தெற்குக்கோடி தீவான கியூஷூவை அணுக முயற்சிப்பதாக ஜப்பானிய ரேடியோ ஒலிபெருக்கிற்று.

(3) **மலாக்கா ஜலசந்தி.**—கிழக்கு இந்தீஸ் கடற்படையைச் சேர்ந்த நாசகாரிகள் மலாக்கா ஜலசந்தியில வெற்றிகரமான போரை நடத்தின.

**பர்மா.**—பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த லிபரேடர் விமானங்கள் பாங்காக்குக்கும், மோல்மீனுக்கும் போகும் இருப்புப்பாதையை துணித்துவிட்டன. தாரவாடி சுத்திசெய்யப் பட்டது. மேற்கு ஆபிரிக்கப் படைகள் குவாவை ஆக்கிரமித்தன. அண்டமான்ஸிலுள்ள போர்ட் ப்ளேர் தாக்கப்பட்டது. பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள பினங்குக்கு சமீபத்தில் ஜப்பானிய சஞ்சாரியை மூழ்கடித்தன.

14-வது சேனை ஷான் சமஸ்தானங்களை நோக்கி முன்னேறி வருகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**13—5—45** (ஞாயிற்றுக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலையங்கள்.—மிகாயா (Mikaya) தீவு.

**பர்மா (Burma).**

பாலம்.—மலேயா (Malaya) தீபகற்பம்.
ஜப்பானியத் துருப்புகள்.—லெட்பாடனு (Letpadan)க்கு அருகிலுள்ள கிராமங்கள்.
சேமிப்புகள்.—பாங்காக் (Bangkok), சிங்கப்பூர் (Singapore) ரயில்வே.

**14—5—45.** (திங்கட்கிழமை)

**தூரக்கிழக்கு (Far East).**

முக்கிய ஸ்தாபனங்கள்.—கியூஷூவிலுள்ள நாகோயா (Nagoya).

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**15—5—45.** செவ்வாய்க்கிழமை.

**தூரக்கிழக்கு (Far East).**

கப்பல்கள்.—ஜப்பானுக்கு அருகில்.
ஜப்பானியத் தற்காப்புகள்.—ஓகினவா (Okinawa).

**பர்மா (Burma).**

ஜப்பானியத் தற்காப்புகள்.—புரோமிற்கு (Prome) வடக்கு, டவுன்கூ (Toungoo), பியூவின் (Pyu) வடமேற்கு.
எதிரித் துருப்புகள்.—டாகா (Ta-Kaw)வின் வடமேற்கு.

**16—5—45.** (புதன்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான உற்பத்தி ஸ்தலங்கள்.—நாகோயா (Nagoya).

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**17—5—45** (வியாழக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

டோக்கியோ (Tokyo).

**பர்மா (Burma).**

ஜப்பானியர் தப்பும் வழிகள்.—பர்மா (Burma) முதல், சியாம் (Siam) வரை.

**18—5—45.** (வெள்ளிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் தற்காப்புகள்.—ஓகினவா (Okinawa).

**பர்மா (Burma).**

துறைமுக ஸ்தாபனங்கள்.—அந்தமான் தீவுக் கூட்டத்திலுள்ள பிளேர் (Blair) துறைமுகம்;

**19—5—45.** (சனிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய விமான ஸ்தாபனங்கள், தொழிற்சாலை இலக்குகள்.-பார்மோசா (Formosa).

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**20—5—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East.)**

சைனுவிலுள்ள நான்கிங் (Nanking).
ஜப்பானியத் தற்காப்புகள்.—ஓகினவா (Okinawa).

**பர்மா (Burma).**

ரயில்வே தளங்கள்.-சம்பான் (Chumphon).

## ஜப்பான் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**15—5—45.** (செவ்வாய்க்கிழமை).
**to**
**21—5—45.** (திங்கட்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**வெற்றி வாரம்** முடிந்துவிட்டது. உலகம் பூராவிலும் நடைபெற்ற கொண்டாட்டம் சுருக்கமாகத்தான் நடைபெற வேண்டியிருந்தது. ஏனெனில் இன்னும் மகத்தான வேலைகள் பாக்கியிருக்கின்றன. ஜெர்மன் படைகளின் இறுதி சரணாகதியும் முடிந்துவிட்டது. பெர்கன், ஹெலிகோலாந்து முதலிய பெரிய ஜெர்மன் கடற்படைதளங்கள் பிரிடிஷ் வசமாகிவிட்டன.

ஆறுவருஷ அழிவிற்குப்பின் ஐரோப்பா சற்று ஆச்வாசமடைந்துவருகிறது.

பிரிடனில் வயது முதிர்ந்தவர்களும், சேனையில் அதிககாலமாக இருந்துவருகிறவர்களும் கலைக்கப்படுகிறார்கள். பிரிடிஷ் ஸ்திரீகள் இனிமேல் கட்டாய சேவைக்கு அழைக்கப்பட மாட்டார்கள். உள்நாட்டிலுள்ள தணிக்கை முறைகள் ரத்து செய்யப்பட்டுவிட்டன.

ஐரோப்பிய வெற்றிக்கொண்டாட்டம் உலகம் பூராவிலும் நடைபெற்றதென்றாலும், அத்தருணத்திலும் மிதமான சிந்தனையும், மறுபடியும் சேவைகளில் ஈடுபடுவதும் வற்புறுத்தப்பட்டன. மே மாதம் 17-ம் தேதியன்று மாட்சிமைதங்கிய மன்னர்பிரான் பிரபுக்கள் சபையிலும், காமன்ஸ்சபையிலும் பின்வருமாறு சொற்பொழிவாற்றினார். "தூரக்கிழக்கிலுள்ள நாஸிகளை தீர்த்துக்கட்டவேண்டியது பாக்கியிருக்கிறது. ஐரோப்பாவில் யுத்தத்தினால் ஏற்பட்ட பாழை நாம் பழுதுபார்க்கவேண்டும். வெற்றியை அளித்த சர்வதேசங்களின் ஒற்றுமை சமாதனத்தை பரிபாலிக்க ஒரு ஸ்தாபனமாக அமைக்கப்படவேண்டும்.

இவ்விதமாக வெற்றி வாரம் வெறியினால் நமக்கு அளவுகடந்த பெருமையை உண்டுபண்ணவில்லை. தியாகத்துக்குத் தகுந்தவாறு எதிர்காலம் அமைக்கப்படவேண்டுமென்றும், அநேக வருஷங்களாக நாம் செய்த தியாகம் வீணாகப் போகக்கூடாதென்றும் நாம் இப்பொழுது பிரார்த்தனை செய்துவருகிறோம். ஐரோப்பிய எதிரி மண்ணைக்கவ்வி விட்டான் என்பது உண்மைதான். சமாதானம் என்ற லாபம் கிடைக்கும் வரையில் நாம் வெற்றியை பிரமாதப்படுத்தக்கூடாது. சமாதான கால வேலைகள் யுத்த சேவையைவிட அதிகமாகக் கடினமானது. ஆகையினால் குதூகல ஆரவாரத்தின்பொழுதும் நேசதேச ராஜதந்திரிகள் சமாதானம், புனருத்தாரணம் என்ற பிரச்னைகளில் கவனம் செலுத்துகிறார்கள். ஐரோப்பாவில் பீரங்கிச் சத்தம் நின்று விட்டதென்றால் வேலை முடிந்துவிடாது. இப்பொழுது அது சோல்ஜர்களிடமிருந்து ராஜதந்திரிகளிடமும் பலாத்காரத்திலிருந்து மனிதவர்க்கத்தின் பகுத்தறிவுக்கும், நல்அறிவுக்கும் மாற்றப்பட்டுவிட்டது. இன்னும் அநேக கெட்ட சக்திகளை நாம் தேடிப்பிடிக்க வேண்டும். சச்சரவையும், ஒற்றுமையின்மையையும் நாம் எதிர்க்கவேண்டும். ஹிட்லரைவிட அபாயம் பொருந்திய எதிரிகள் இருக்கிறார்கள். அவர்களை புத்திசாலித்தனத்தினாலும், நம்பிக்கையாலும், அன்பினாலும் அடக்கியாளவேண்டும். வெறுப்பினால் ஒன்றும் பயன்படாது.

வி வி வி வி வி

**யுத்தத்துக்குப் பிந்திய ஜெர்மனி.** ஹிட்லர் இறந்துவிட்டாலும் நாஸித்வம் அழிவுபடவில்லை. ஹிட்லர் ராணுவ யந்திரத்தையும், ராஜிய திட்டத்தையும் அமைத்தான். விஷமுள்ள மரம்போல் ராஜியம் ஜனங்களின் மனப்பான்மையைக் கெடுத்திருக்கிறது. நாஸிகளின் அமுலுக்குட்பட்டு, மனித இயல்பற்ற துறையில் விஞ்ஞான சாஸ்திர முறைப்படி பயிற்சிபெற்றவும் கொலையிலும், கொள்ளையடிப்பதிலும் குதூகலப்படுவதுமான காட்டுமிராண்டி ஜாதியுள்ள ஒரு யுகம் தோன்றியிருக்கிறது. ஹிட்லர் உலகத்துக்கு அளித்த சொத்து யாதெனில், ஐரோப்பாவுக்கு நாசம் ஏற்பட்டதுடன் அதிலுள்ள

தேசங்களும் இங்குக்குள்ளாகிவிட்டன. சம்பவத்திற்குப் பிறகாவது பச்சாதாபப் படுவோமென்ற எண்ணமே அவர்களிடம் காணப்படவில்லை. லிஸ்பனில் ஜெர்மன் நாஸி தத்வத்தைக் கடைப்பிடிக்கும் மாதாக்கோவிலில் போல்ஷிவிசத்தை எதித்துப் போராடிய போரில் உயிர்துறந்த ஒரு மகாவீரர் என்று ஹிட்லரை மதித்து விசேஷமான பிரார்த்தனைகள் நடந்ததாம்.

ஆகையால் ஜெர்மன் தேசமக்களிடமிருந்து ஹிட்லர் என்ற விஷத்தை அப்புறப்படுத்து வதுதான் ஐரோப்பாவில் யுத்தத்துக்குப் பிந்திய முதல் அலுவலாகும். 1940-ம் வருஷத்தில் உலகம் தப்பித்துக்கொண்டது. அது இனிமேல் விஷத்துடன் விளையாடமுடியாது.

வி வி வி வி வி

**கடுமையான நடவடிக்கைகள்.** சென்ற வாரத்தில் நாம் ஒரு யுத்த முடிவைக்கொண்டாடி னோம். யுத்த நிபந்தனைகளையும், முறைகளையும் புறக்கணித்த ஒரு எதிரியுடன் நாம் போர் புரிந்தோம். ஜெர்மானியர்கள் பாத்தியம் கொண்டாடுவது போல இது கால் பந்து விளையாட்டின் முடிவு போன்றதல்ல. பந்து விளையாட்டு முடிவில் ஜெயம் பெற்றவரும் தோல்வி பெற்றவரும் முடிவைப்பற்றி திருப்திப் படுகிறார்கள். ஏனெனில் விளையாட்டு ஞாயமான முறையில் நடைபெற்றது. இருதரப்பாரும் கைகுலுக்கிக்கொண்டு சந்தோஷமாகப் பிரிந்துவிடுவார்கள். முறியடிக்கப்பட்ட ஜெர்மானியர் கள் அவ்விதமான விளையாட்டு விரோதிகள் அல்ல. 1918-ம் வருஷத்திய தவறுதல்கள் மறுபடியும் தோன்றாமலிருக்கவேண்டுமானால் ஜெர்மானியர்களைக் குறித்து கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். ஜெர்மானியர்களைக் குறித்து நேசதேசத் தாரின் மனப்பான்மை கடினமாகிவிட்டது. இது இழிவான பழிவாங்கும் முறையல்ல. ஆனால் அவசியத்தை முன்னிட்டது. ஜெர்மன் படைகள் நிராயுதபாணிகளாக்கப்பட்டு காவல் முகாம்களுக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள். ஹாலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய தேசங்களில் ஏற்பட்ட நாசத்தைப் பழுதுபார்க்க அவர்கள் உபயோகிக்கப்படு வார்கள். ஜெர்மன் பொதுமக்களுக்கு ஜீவனத்துக்குப் போதுமான உணவு அளிக்கப்படும். ஆக்கிரமிப்பு சேனைக்கு ஆகாரத்தையும், வசதிகளையும், அளிக்கவும் அவர்கள் அடிமைப்படுத்தி யுள்ள அயல்நாட்டுத்தொழிலாளர்களுக்குத் தேவையானவைகளை ஸப்ளை செய்யவும் அவர்கள் ஒத்தாசை செய்யவேண்டும். ஜெர்மனியின் மனித சக்தியும், வியாபாரமும், தொழிற்சாலை களும் இந்த நோக்கத்துடன் உபயோகப்படவேண்டும்.

பூமியின் தாழ்வரைகளிலுள்ள யுத்த தளவாட தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன, அல்லது நேசதேசத்தாரின் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன. ஜெர்மனியின் துறைமுகங்களும், கப்பற் துறைகளும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. ஜெர்மன் ரகசியப் போலீஸார் வேட்டையாடப்படுகிறார்கள். எவ்வளவு அந்தஸ்து உள்ளவர் களாக இருந்தபோதிலும் கைது செய்யப்பட்ட நாஸித்தலைவர்கள் குற்றவாளிகளைப்போல்தான் நடத்தப்படுகிறார்கள். கைது செய்யப்பட்டவுடன் கோயரிங்க் பிடித்தவருடன் கைகுலுக்கக் கூடாதென்று சொன்னதிலிருந்தே நேசதேச மனப்பான்மை வெளிவருகிறது. மேலும் குயிஸ் லிங்கைக் கைது செய்தபொழுது அவனை வரவேற்புச்செய்த முறையும் கைதிகளை நடத்தும் முறைக்கு உதாரணமாகும். "நான் சாதாரணக் கைதியா" என்று குயிஸ்லிங் கேட்டார். அதற்குபின்கண்ட பதில் சொல்லப்பட்டது" "இல்லை, நீங்கள் விசித்திரமான கைதி." அதாவது அவன் கோரமான ராஜதுரோகி என்று பொருள்படும்.

நாஸித்தலைவர்களுக்கு விசேஷச்சலுகை காட்டப்படமாட்டாது. கோயரிங்கும் அவரைப்போன்ற மற்றவர்களும் காவல்முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அங்கு அவர்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள்தான் வழங்கப்படும். கைதியாகப் பிடிக்கப்பட்ட டோனிட்ஸ் தாத்காலிகமான ஒரு வட்டாரத்தின் நிர்வாகத்தை நடத்த அமர்த்தப்படுவார். ஆகிலும் அவர் நேசதேசத்தாரின் அமுலுக்குட்பட்டிருக்கவேண்டும்.

வி வி வி வி வி

**நான்காவது ரீச்.** மூன்றாவது ரீச்சுக்குப் பதிலாக அமைக்கப்படும். அது சின்னாபின்னப் படுத்தப் படாவிட்டாலும் ஒரு சிறிது கலைக்கப்படும். பெர்லின் தலைநகரமாக இருக்காது. ஜெர்மன் அதிகாரிகள், ஆக்கிரமிப்பு அதிகாரிகள் அமுலுக்குட்பட்டு நிர்வாகத்தை நடத்துவார்கள்.

ஆக்கிரமிப்பு வட்டாரங்கள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. பிரிடிஷ் வட்டாரம் பிரஷ்யா, வெஸ்ட்பாலியா மாகாணம், ஹானோவர், ஷெல்ஸ்விக்ஹோல்ஸ்டீன், ரைன்நதி மாகாணத்தின் ஒரு பாகம் கொண்டவை.

வி வி வி வி வி

**சர்வதேச விஷயங்கள்.** நேசதேச ராணுவ நிர்வாகம் புதிதாக சம்பாதிக்கப்பட்ட நாட்டில் நிர்வாகத்தை அமைக்க முயன்று வரும் பொழுது வயதுமுதிர்ந்த ராஜ தந்திரிகள் யுத்த நிறுத்தம் காரணமாக நேசதேசத்தார்களுக்கிடையே தோன்றக்கூடிய வித்யாசங்களைத் தீர்த்துவிடும் பிரச்னையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவ்விதம் தீர்க்கப்படாவிடில் விபரீதங்கள் ஏற்படும்.

வி வி வி வி வி

**சான் பிரான்ஸிஸ்கோ மகாநாடு.** ஜூன்மாதம் 5-தேதிவாக்கில் முடிவடையும். உலக ஸ்தாபனத்துக்கான தீர்மானத்திற்குவந்த திருத்தங்களை ஐந்து பெரிய வல்லரசுகளும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். டம்பார்டன் ஓக்ஸ் திட்டத்தைத் திருத்தி உலக பத்திர சபை சமாதானத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வரையில் தனிப்பட்ட நாடுகளும் ஒரு வட்டாரத்திலுள்ள நாடுகளும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமென்று ஏற்பாடு செய்யப்படலாம். ஆகிலும் மகாநாடு கூடும்பொழுது இருந்த உற்சாகத்துடன் கலையுமாவென்பது சந்தேகமாயிருக்கிறது. ஒரு சிறிது செய்தாகி இருக்கிறது. ஆகிலும் இன்னும் பெருவாரியாக பாக்கி இருக்கிறது.

வி வி வி வி வி

**ருஷ்ய மனப்பான்மை.** ஐரோப்பாவில் ருஷ்ய மனப்பான்மை இன்னும் தெரியவரவில்லை. எக்னமிஸ்ட் சொல்லுகிறபடி யுத்தத்துக்குப்பிந்திய ருஷ்ய நடவடிக்கையானது வெற்றியின் மயக்கத்தினலோ அல்லது மேற்கு வல்லரசுகள் ருஷ்யாவுக்கு விரோதமாக ஒன்று சேர்ந்துவிடுவார்களோ வென்ற பீதியினால் நிர்ணயிக்கப்படுகிறது. ருஷ்யா பால்டிக்கிலுள்ள ஸ்டெட்டினிலிருந்து மத்திய ஐரோப்பா வழியாக ஆட்ரியாடிக் கடலிலுள்ள டிரிஸ்டி வரையில் ஒரு தற்காப்பு அரணை அமைப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இந்த உத்தேசத்துடன் யூகோஸ்லாவியாவின் சார்பாக டிரிஸ்டியைக் கைப்பற்றும்படி டிடோவை ருஷ்யா தூண்டிவிட்டதென்றும் சந்தேகிக்கப்படுகிறது. ருஷ்யா தூண்டுதல் செய்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, டிடோ டிரிஸ்டியை பலாத்காரமாக ஆக்கிரமித்துவிட்டு பிரிடனும், அமெரிக்காவும் ஆக்ஷேபித்த பின்னும் அதைக் கைவிட்டுவிட மறுத்துவிட்டான். பீல்டு மார்ஷல் அலெக்ஸாண்டர் சொல்லுவதுபோல இது ஹிட்லர் ஸ்வபாவமாகயிருக்கிறது. தேசங்கள் யுத்தத்தை நடத்திய லக்ஷியத்துக்குப் புறம்பானது. சமாதான வட்டமேஜையில் பாத்தியங்களைக் கொண்டாடுவதுதான் டிட்டோவுக்கு நல்ல முறை.

மேலும் போலீஷ் பிரச்னையும் சங்கடமாக இருக்கிறது. மே மாதம் 15-ம் தேதியன்று அதைப்பற்றி ஸ்டாலின் வெளியிட்ட அபிப்ராயமும் திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை. யால்டா முடிவுகளைப் பின்பற்றுவதாக சொல்லிக்கொண்டே யால்டா மகாநாட்டில் உத்தேசிக்கப்படாத சில நிபந்தனைகளை அவன் விதிக்கிறான். நேசதேசத்தார்கள் அவற்றை ஒத்துக்கொள்ளவேண்டுமென்றும் அவன் எதிர்பார்க்கிறான். ருஷ்ய செல்வாக்குள்ள தற்பொழுதுள்ள மாகாண நிர்வாகம் தொடர்ந்து அதிகாரத்திலிருக்கவேண்டிய உத்தேசத்துடன் போலீஷ் நிர்வாகம் அமைக்கப்படவேண்டுமென்று அவன் வற்புறுத்துகிறான். மேற்கு வல்லரசுகள் போலந்தை ருஷ்யாவுக்கு எதிராக எல்லை மாகாணமாக உபயோகிக்க உத்தேசிக்கிறார்களென்று அவர் எண்ணுகிறார்.

ருஷ்யாவுடன் சமாதானம் பேசச்சென்ற 16 போல்களைக் கைது செய்ததற்கு, அவர்கள் சட்டத்தை மீறியவர்கள் என்றும், ராஜதுரோகிகள் என்றும் சொல்லப்படுகிறது.

ஆகையால் வித்தியாசங்கள் நேசதேசத்தார்களிடையே காணப்படுகின்றன. ஆகிலும் அவைகள் மறையக்கூடியவைகள். நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட நடவடிக்கையிலிருந்து அவர்களைச் சலிக்கும்படி செய்யக்கூடியவையல்ல. அவைகள் ஸ்நேகிதர்களுக்குள் ஏற்படும் வித்தியாசங்களைப் போல் சுலபமாக தீர்க்கப்படலாம். அதற்கு நேசதேசத்தாரிடம் போதுமான ராஜதந்திர மேதை இருந்துவருகிறது. மூன்று பெரிய வல்லரசுகளும் முக்கியமான லக்ஷியத்தை மறந்துவிடமாட்டார்கள். அவர்கள் மறந்துவிட்டால் அபாயம் நேரிடும். அவர்

களுக்குள் சச்சரவு ஏற்பட்டால் கிழக்கு, மேற்கு என்ற இரண்டு ஐரோப்பாக்கள் தோன்றும். நாஸிகள் புத்துயிர் பெறுவதைத் தடுக்க ஐரோப்பிய நாடுகள் ஒரே சமஷ்டியாகயிருக்க வேண்டும்.

ருஷ்ய அபிப்பிராயத்தைத் திடமாகக் கூறும் இஸ்வெஸ்டியா என்ற பத்திரிகை நம்பிக்கையை வளர்ச்சிக்கக்கூடிய வகையில் பின்கண்ட வியாக்யானத்தை எழுதியிருக்கிறது.

"கிரைமியா முடிவுகளை அமுலுக்குக் கொண்டுவரும் போர் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. பெரிய வல்லரசுகளிடையே தீர்க்கமுடியாத சிரமங்கள் இருக்கின்றனவென்ற வதந்திகளுக்கு யாதொரு ஆதாரமும் கிடையாது."

வி வி வி வி வி

**ஜப்பான்.** நேசதேசத்தார்களை சமாதானப்படுத்தவும், அவமானத்தைத் தவிர்க்க நிபந்தனையற்ற சரணுகதி இல்லாமல் சமாதானப் பேச்சைத் துவக்கவும் ஜப்பான் முயற்சி செய்துவருகிறது. அது பலஹீனமடைந்துவிட்டது. கடலிலும், ஆகாயத்திலும் நேசதேசத்தாருக்கு ஆதிக்கம் கிடைத்துவிட்டதென்றும், தரையில் படைகளுக்குத் தோல்வியும், ஜப்பானில் படையெடுப்பும் வெகு சீக்கிரத்தில் நடைபெறுமென்றும் ஜப்பான் அறிந்துவிட்டது. நேசதேசக் கடற்படை ஜப்பானின் தெற்குக்கோடித் தீவான கியூஷூவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. மலாக்கா ஜலசந்தியில் கடற்போர் நடைபெறுகிறது. சமாதானத்தைக் கோறுவதைத் தவிர ஜப்பானுக்கு வேறு வழியில்லை. நேசதேசத்தார்கள் இணங்கமாட்டார்கள். ஜெர்மனியுடனும் இதாலியுடனும் இருந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக ஜப்பான் சொல்லுகிறது. ஜெர்மனி நிபந்தனையற்ற சரணுகதி செய்துவிட்டதால் மூவர் ஒப்பந்தம் நின்றுவிட்டதென்று அது சொல்லிவருகிறது. சக்கிரவர்த்தி ஹிரோஹிடோ பாஸிஸ்டு சாம்ராஜ்ய ரூல் சங்கத்தைக் கலைத்துவிட்டான். ஜனநாயக முறையில் தேருதலை நடத்துவதாகச் சொல்லுகிருர். மிட்சூயி, மிட்சுபிஷி என்ற ஜப்பானிய முதலாளிகளின் சார்பாக ருஷ்யாவின் ராஜதந்திரிகள் மூலமாக சமாதான திட்டம் சான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதேசமயத்தில் அவர்கள் பொய் பிரசாரமும் செய்து வருகிருர்கள். கோயபல்ஸின் முறை கையாளப்படுகிறது. உண்மைக்கு மாருக எதிரிகளின் அநேகக்கப்பல்களை மூழ்கடித்து விட்டதாக ஜப்பான் சொல்லிவருகிறது. தூரக்கிழக்குப் படைகளை நேசதேசத்தார்கள் அனுப்புவதில் ஏற்பட்ட காலஹரணத்தை, அலக்ஷியமும் பலஹீனமும் என்று ஜப்பான் வியாக்யானம் செய்து வருகிறது. மஞ்சள் ஜாதியாரென்று சைனவுடன் ஜப்பான் சகோதரபாவத்தைக் கொண்டாடுகிறது. நேசதேசத்தார்களிடையே பிளவை உண்டுபண்ண ஜப்பான் முயன்று வருகிறது. ஜப்பான் முறியடிக்கப்பட்டு பிரசாரர்கள் தற்கொலை செய்துகொள்ளும் வரையிலும் இந்த அபத்தப்பேச்சு இருந்தே தீரும். ஜப்பான் எச்சரிக்கை உடனிருக்கட்டும். ஐரோப்பிய ஆயுத சாலையிலிருந்து மனிதபலமும், தளவாடபலமும் குவிந்து வருகிறது. சாமான்கள் அபரிமிதமாக இருப்பதால் அவைகளை அப்புறப்படுத்துகிறவர்களுக்கு அதிக சிரமம் ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**பர்மா.** இங்கு போர் திருப்திகரமாக நடைபெறுகிறது. 14-வது சேனை மேற்கு, மத்திய, கிழக்கு என்று மூன்று பகுதிகளாக பர்மாவைத் துண்டித்து விட்டது. இப்பொழுது கிழக்குவட்டாரத்தில் போர் நடைபெறுகிறது. மற்ற இரண்டு பகுதிகளில் படைகள் துடைக்கப்படுகின்றன. ஷான் நாடுகளைக் குறித்து முன்னேறும் பிரிடிஷ் படைகளுக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. ஜப்பானியர்கள் தாழிக்கு அருகில் பின்வாங்கிக்கொண்டே போர்புரிந்து வருகிருர்கள்.

வி வி வி வி வி

**சீன-அமெரிக்கர்கள்.** பர்மாவில் தென்கிழக்கு ஆசியா கமாண்டிலிருந்த சீன-அமெரிக்கப்படைகள் பர்மா ரஸ்தா திறக்கப்பட்டு விட்டதால் சீனுவுக்கு அனுப்பப்படுகின்றன.

வி வி வி வி வி

**புதிய யுத்த வெகுமதிகள்.** மாட்சிமைதங்கிய மன்னர்பிரான் ஆறு யுத்த வெகுமதிகளை ஏற்பாடு செய்திருக்கிருர். அட்லாண்டிக் ஸ்டார், விமானப்படை க்ரூப் ஸ்டார், இதாலி ஸ்டார், பிரான்ஸ் ஜெர்மனி ஸ்டார், பசிபிக் ஸ்டார், பர்மா ஸ்டார், கடல்தாண்டி யுத்த சேவையிலீடுபடாத சேவைக்கும் இன்னும் சில குறிப்பான சேவைகளுக்கும் தற்காப்புப்பதக்கம் என்ற ஒரு பரிசு வழங்கப்படும்.

# ஜெர்மனியின் தோல்வி—அப்பொழுதும் இப்பொழுதும்.

## *1918-ம் வருஷத்துடன் ஒப்பிடுவது.*

### லெப்டினனண்ட் ஜெனரல் H. G. மார்டின்.

1918-ம் வருஷத்தை ஞாபகப்படுத்தி அதற்கும் இந்த வருஷத்துக்குமுள்ள சாம்யத்தை ஆராய்ச்சி செய்வோம்.

அப்பொழுது ஜெர்மனியின் வீழ்ச்சி நேசதேசத்தார்களை பிரமிக்கச் செய்தது. நேச தேசத்தார்கள் எல்லோரும் யுத்த நிறுத்த நிபந்தனைகளைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார்கள். அவர்களுக்குள் அபிப்பிராய பேதங்களிருந்தன. எதிர்த்துப்போராட ஜெர்மானியர்களுக்கு இன்னும் சக்தியிருக்கிறதென்று அறிந்த ஹேக் நேசதேச நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் மிதமாகயிருக்கவேண்டுமென்று சிபார்சுகள் செய்தார். மற்ற நேசதேசத் தார்களைவிட யுத்தத்தில் களைப்புறாத பெர்ஷிங், யாதொரு யுத்த நிறுத்த ஷரத்துகளை ஏற்படுத்துவதைக் கண்டனம் செய்தார். எதிரி நிபந்தனைகளையற்ற சரணாகதி செய்யும் வரையில் நேசதேசத்தார்கள் போரை நடத்தவேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார்.

கடைசியாக, 1918ம் வருஷம் நவம்பர் மாதம் 11-ம் தேதியன்று ஜெர்மன் தூது கோஷ்டிக்கு பாக் சமர்ப்பித்த ஒப்பந்த ஷரத்துகள் அவருடைய சொந்த யோசனைகள்தான். அந்த ஷரத்துக்கள் ஹேக் சொன்னதற்கு அதிகமாகவும், பெர்ஷிங் சொன்னதற்குக் குறை வாகவும் இருந்தன. அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்ட ஷரத்துகள் பரிஷ்காரமாக இல்லை. அவைகளை சமர்ப்பித்ததும் சரியாகஇல்லை.

யுத்த நிறுத்தம் என்பது ராணுவ நடவடிக்கை. அதைப் பேசிமுடிப்பது, எதிர்த்துப் போர் புரியும் ராணுவத் தலைவர்களின் பொருப்பு. அப்பொழுது ஜெர்மன் தூது கோஷ்டி ஜெர்மன் ராணுவ அதிகாரிக்கு பிரதிநிதியாக இருந்தது. ஜெர்மன் அயல்நாட்டு ஆபீஸின் சூழ்ச்சியினால் ஜெர்மன் தூதுகோஷ்டிக்குத் தலைமை வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஜெர்மன் ஜெனரலுக்குப்பதிலாக எர்ஸ்பர்கர் என்ற பொதுஜனமான ஒருவரின் பெயர் தெரிவிக் கப்பட்டது. ஆகையால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் எர்ஸ்பர்கரை தங்களுடைய கோபத்துக்குக் காவுகொடுத்தார்கள். இவ்விதமாகத்தான் போர்முனையில் முறியடிக்கப் படாத ஜெர்மன் சேனை முதுகில் குத்தப்பட்டதென்ற ஒரு கட்டுக்கதை உண்டாகிற்று. சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டபின் ஜெர்மன் சேனை புத்துயிர் பெறுவது நேசதேசத்தாரின் இரண்டு பலஹீனங்களினால் துரிதப்படுத்தப்பட்டது. நேசதேசத்தார்கள் யுத்தக் கைதிகளையும், யுத்தக் குற்றத்தையும், சரியான முறையில் விசாரிக்கவில்லை.

இன்றைய நிலைமையை 1918-ம் வருஷத்திய நிலமைக்கு ஒப்பிடலாம். மறுபடியும் ஜெர்மனியின் வீழ்ச்சி நேசதேசத்தாரை பிரமிக்கச் செய்கிறது. மற்ற அம்சங்களில் தற்போது உள்ள நிலமை வேறுபட்டது. இப்பொழுது நேசதேசப்படைகள் பெர்ஷிங்கின் ஆலோசனை யான நிபந்தனையற்ற சரணாகதி என்பதை ஜெர்மானியர்கள்பேரில் சுமத்திவிட்டார்கள். யுத்த நிறுத்தம் என்றால் தோல்வி பெற்றவர்களுக்கு சில பொருப்புகளையும், சில உரிமைகளை யும் வழங்கும், நிபந்தனையற்ற சரணாகதி சாஸனம் தோல்விபெற்றவர்களுக்கு யாதொரு உரிமைகளையும் தராது. இப்பொழுது ஜெர்மனியின் பூராப்படைகளும் கைதிகளாக இருக் கிறார்கள், அல்லது போர்முனையில் கலைக்கப்பட்டுவிட்டார்கள். நேசதேசத்தாரின் உத்திரவை எதிர்பார்த்து நிற்கிறார்கள். இப்பொழுது ஜெர்மன் படைகள் நிராயுதபாணிகளாகச் செய்யப்படுவார்கள்.

---

# ஜெர்மனியில் நேசதேச ஆக்கிரமணம்.

## மேன்பார்வை தூதுகோஷ்டியின் வேலை.

### W. N. யூயர்.

ஐரோப்பிய வெற்றி தினத்திற்குப்பின் "ஜெர்மனியின் ஆட்சி நேசதேச மேன்பார்வை கமிஷனிடம் ஒப்படைக்கப்படும். ஜெர்மனி நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்படும். நான்கு நேசதேசப் படைகள் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களுக்கு ஒத்தவாறு அமெரிக்க, பிரிடிஷ்

பிரெஞ்சு, ருஷ்ய வட்டாரங்கள் அமைக்கப்படும். மேன்பார்வை கமிஷன் ஏற்பாட்டின்படி பெர்லினிலிருக்க வேண்டும். ஆகிலும் இது சில காரணங்களை முன்னிட்டு இப்பொழுது சாத்யமில்லை.

நிர்வாக அமைப்பு எவ்விதம்! எனக்கு முக்கியமான விவரங்கள் தெரியும். ஜெர்மனியில் நான்கு உயர்தர கமிஷனர்கள் இருப்பார்கள். அமெரிக்காவின் சார்பில் ஈசன்ஹவரும், பிரெஞ்சுக்காரருக்காக ஜெனரல் கோயல்பஸும் இருப்பார்கள். கோயல்பஸ் தான் டுனிஸியாப் போரில் கௌரவம் பெற்றவர். பிரிட்டனின் சார்பாக ஸர் பெர்னுட் மாண்ட்காமரியாவது அல்லது ஸர் ஹாரோல்ட் அலெக்ஸாண்டராவது கமிஷனராக இருக்கலாம். ஆகிலும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ருஷ்ய கமிஷனரின் பெயரும் வெளியிடப்படவில்லை.

பிரிடிஷ் கமிஷனருக்கு அயல்நாட்டுக் காரியாலயத்திலுள்ள மிஸ்ட்டர் ஐவான் கிர்க் பாட்ரிக்கும், யுத்த ஆபிஸில் பொதுஜன விஷயங்களின் டிரெக்டரான மேஜர் ஜெனரல் S. W. கிர்பியும் ஆலோசகர்களாக இருப்பார்கள். அவரிடம் ராஜியம், பொருளாதாரம், செல்வம், பத்திரம், கல்வி, முதலிய அநேக இலாகாக்கள் இருக்கும். ஒவ்வொன்றும் பொது ஜன சேவகர்களான நிபுணர்களின் கண்காணிப்பிலிருந்து வரும். ராணுவம், கப்பற்படை, விமானப்படை என்ற மூன்று சேவைப்படை இலாக்காக்களும் இருந்துவரும். பிரிடிஷ் வட்டாரத்தில் ஹை கமிஷனரின் உத்தரவுகளை அமுல நடத்துவதற்கும், ஹை கமிஷனருக்கு ஜவாப்தாரியுமான ஜெனரல் அந்த வட்டாரத்தின் சார்ஜை வகிப்பார். நகரங்களிலும், மாகாணங் களிலும் உள்ள பிரிடிஷ் அதிகாரிகளுக்கு இருவகையான பொருப்புண்டு. ஒன்று வட்டார கமாண்டருக்கு, மற்றொன்று பெர்லினுள்ள இலாகாத் தலைவர்களுக்கு. இது ஒரு முறையில் சிக்கலாகத் தோன்றுகிறது. ஆனால் இந்தத் திட்டம் தீர்க்காலோசனையின்பேரில் நிறுவப் பட்டிருக்கிறது.

அமெரிக்க ஸ்தாபனமும் இதே போன்றதுதான். ஆகிலும் ஈசன்ஹவரிடம் பொதுஜன வேலைகளைக் கவனிக்க டெபுடியாக மேஜர் ஜெனரல் லூஷியஸ்கிளே வேலை செய்துவருவார். ஜெனரல் கிளே என்பவர் இஞ்ஜினியர் ஆபீஸர். அவர் நிர்வாகி என்ற முறையில் கியாதி பெற்ற வர். மிஸ்ட்டர் கிர்க்பாட்ரிக்குக்கு சமமான அந்தஸ்தாக, நிர்வாக இலாகாவைச் சேர்ந்த மிஸ்ட்டர் ராபர்ட் மர்பி ஈசன்ஹவரின் ராஜீய ஆலோசகராக இருப்பார். ருஷ்ய நிர்வாகத் தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

நான்கு கமிஷனர்களும், நான்கு வட்டாரங்களின் உயர்தர அதிகாரிகளாக இருப்பதுடன் நேசதேச மேன்பார்வை கமிஷன் அங்கத்தினர்களாக ஒன்று சேர்ந்து, பொதுவான காரியங் களை விவாதித்து முடிவு செய்வார்கள். நேசதேசத்தாரின் முக்கியமான கொள்கைகள் ஏற் கனவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டன. அவற்றை ஐரோப்பிய ஆலோசனை கமிஷன் நிறை வேற்றி வருகிறது. கொள்கையை அமுலுக்குக் கொண்டு வருவதும், அவைகளை சந்தர்ப்பங் களுக்கும், சந்நிவேசங்களுக்கும் தக்கவாறு திருத்தியமைத்துக்கொள்வதும்தான் கண்ட்ரோல் கமிஷனின் வேலைகள். ஆகிலும் அவைகள் தங்களுடைய நிர்வாகத்தின் இறுதி உத்திரவுகளுக்கு உட்பட்டவர்கள்.

பிரிடிஷ் ஆலோசகரான ஐவான் கிர்க்பாட்ரிக் ஜெர்மனி சம்பந்தமான விஷயங்களில் அயல்நாட்டு ஆபீஸைச் சேர்ந்த அந்தஸ்து பெற்ற அதிகாரி. அவர் 1933-ம் வருஷம் முதல் 1938-ம் வருஷம் முடிய பெர்லினுள்ள அயல்நாட்டு காரியாலயத்தில் முதலாவது காரிய தரிசியாக இருந்திருக்கிறார். ஹிட்லரைப் பற்றி அவன் பின் வருமாறு சொல்லுகிறான் :— "நான் சந்தித்தவர்களில் அவனைப்போல் கெட்ட மனிதன் ஒருவரும் இருக்கமாட்டார். அவன் அரைக்குள் நுழைந்தாலே தீங்கு ரூபமெடுத்து வருவதுபோல தோன்றும்." ஆனால் முதலாவது காரியதரிசிகள் கொள்கைகளை நிறுவுவதில்லை, அவர்கள் ரிபோர்ட்டு செய்யலாம், சிபார்சு செய்யலாம். அவர்கள் உத்திரவுகளை அமுல் நடத்தவேண்டும். ஆகையினால்தான் ஐவான் கிர்க்பாட்ரிக் அயர்லாந்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், மூனிக்கில் கோடஸ் பர்க்கில் ஹிட்லருடன் சேம்பர்லின் பேசியபொழுது அவர்மட்டும் அந்த அரையிலிருந்தார் அவருக்குமட்டும்தான் ஜெர்மன் பாஷை நன்கு தெரியவரும்.

அவர் மறுபடியும் அயல்நாட்டு காரியாலயத்துக்குத் திரும்பிவந்தார். திடீரென்று ஒருநாள் அவர் கியாதிபெற்றார். 1941-ம் வருஷம் மே மாதத்தில் ஒரு இரவில் ருடால்ப் ஹெஸ் ஸ்காட்லாந்தில் விமானத்திலிருந்து இறங்கினர். அவரை அடையாளம் கண்டுபிடித்து பிரச்னம் பண்ணும்படியாக கிர்க்பாட்ரிக் அனுப்பப்பட்டார். உடன்காலத்தில் அவர் ஒரு அற்புதப் புருஷராக ஆகிவிட்டார். ஹெஸ்ஸுடன் அவர் செய்த சம்பாஷணை ருசிகரமாக

இல்லை. மிகவும் ஆயாசத்தைத் தந்தது. அதன் பின் அயல்நாட்டு காரியாலயத்திலிருந்து B. B. C.-யின் ஐரோப்பிய ஒலிபெருக்குச் செய்தியின் ராஜீய கண்ட்ரோலராக அவர் நியமிக்கப்பட்டார். பிரிடனின் ராஜீயப் போர் அமைப்பில் இது ஒரு முக்கியமான ஸ்தானம். சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் ஜெர்மனிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நேசதேச கண்ட்ரோல் கமிஷனின் பிரிடிஷ் பகுதிக்கு ராஜீயத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்.

ஐவான் கிர்க்பாட்ரிக்கைப்போல அமெரிக்க ஆலோசகரான ராபர்ட் மர்பியும் ஹிட்லரை வேறுபட்ட சந்தர்ப்பங்களில் சந்தித்திருக்கிறார். அவர் 1923-ம் வருஷத்தில் மூனிக்கில் அமெரிக்க ஸ்தானிகராக இருந்தார். நாஸிகளின் புரட்சி வீணானதைக் கண்ணுற்றார். ஹிட்லரை விசாரணை செய்து தண்டித்ததையும் அவர் கண்ணுற்றார். பிரான்ஸ் வீழ்ச்சி பெற்ற 1940-ம் வருஷம் வரையில் பாரிஸிலிருந்த அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தில் அவர் போதகராக இருந்தார். அவர் வாஷிங்டனுக்கு அழைக்கப்பட்டார். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பிதேயன் நிர்வாகத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள தீர்மானித்தபொழுது அவர் அதிகாரியாக விச்சிக்கு அனுப்பப்பட்டார்.

---

## நாஸிகள் கொள்ளை சாமான் சேமிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

### 50 மிலியன் பவுன்கள் பொருமானமுள்ள தங்கக்கட்டி.

கோதாவுக்கு சமீபத்தில் 2,000 அடி ஆழத்திலுள்ள உப்பு சுறங்கத்திலுள்ள குகைகளில் காணப்பட்ட நாஸிகள் கொள்ளையடித்து வைத்திருந்த ஏராளமான தங்கம் அமெரிக்காவின் பலமான ரக்ஷணையுடன் ஒரு ரகசியமான ஸ்டோருக்குக் கொண்டுபோகப்பட்டதென்று S. H. A. E. F.ன் டெயிலி ஹெரால்ட் நிருபர் எழுதுகிறார்.

தங்கக்கட்டி மட்டும் 50 மிலியன் பவுன்களுக்கு அதிகப்பொருமானமுள்ளது. 10 டன் கனமுள்ள 30 லாரிகள் அவைகளைக் கொண்டுபோகத் தேவைப்பட்டன. அதை வண்டிகளில் ஏற்ற 23 மணி நேரம் கூலியாட்கள் வேலை செய்தார்கள்.

சுறங்கத்திலிருந்த மற்ற கலாச்சின்னங்களை அகற்ற 27 லாரிகள் உபயோகிக்கப்பட்டன.

கட்டிகள் பேரில் காணப்படும் அடையாளங்களிலிருந்து இந்தத் தங்கம் ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து எடுக்கப்பட்டதென்று தெரியவருகிறது.

சுறங்கத்தில் S. S. படைகள் கொள்ளையடித்து பெட்டிகள் நிறைய வைக்கப்பட்ட 189 டிரங்குகள் இருந்தன. அவைகளில் முத்துகளும், வயிரங்களும், மற்ற கல்களும், தங்க கடிகாரங்களும், வெள்ளி சாமான்களும், ஆயிரக்கணக்கான தங்க மோதிரங்களும், தங்க, வெள்ளித்தட்டுகளும் இருந்தன.

S. H. A. E. F. ல் பொக்கிஷ இலாகாவின் டெபுடித்தலைவரான பெர்ன்ஸ்டீன் என்னிடம் பின்வருமாறு சொன்னார்:—அவைகளுக்கு ஸ்வான்தார்கள் எவ்வளவு பேர்கள் இறந்து போனார்கள் என்று ஒருவரும் மதித்துச் சொல்ல முடியாது. நிச்சயமாக ரீச்பாங்கி இந்த கொள்ளை சாமான்களை வாங்கிச் சேமித்துவைத்திருக்கிறது.

ஜெர்மன் தேசிய பாங்கியின் பல்வேறு கிளைஸ்தாபனங்களில் ஜெர்மன் தங்கம் ஏராளமாகக்கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கோபர்க்கில் தங்கக்கட்டி தோட்டங்களிலும் கோழியின் கூண்டிலும் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

[illegible] கைப்பற்றப்பட்ட தஸ்தாவேஜிகளிலிருந்து பொக்கிஷ நிபுணர்கள் ஜெர்மனிக்கு வெளிநாடுகளில் எவ்வளவு பொருள் பரிவர்த்தனை இருந்ததென்று கண்டுபிடித்துவருகிறார்கள். நஷ்ட ஈடு பெறுவதற்கு இது மிகவும் முக்கியமாக இருக்கும்.

---

## மனிதர்களின் ஊக்கம் வெற்றி பெற்றது.

### ஐரோப்பாவில் வெற்றி.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

உலகம் பூராவையும் ஆயிரக்கணக்கான வருஷங்கள் வரையில் அநாகரீகத்திலும், துயரத்திலும் ஆழ்த்தியிருக்கக்கூடிய ஒரு பெரிய சாயை அடியோடு மறைந்தது. நமக்கு இது பெரும் புகழைத்தரக்கூடியது.

ஐரோப்பிய யுத்தத்தில் நாம் வெற்றி பெற்று விட்டோம். நீலமான ஆகாசமும், விமானத்தாக்குதல் எச்சரிக்கையும் காணப்பட்ட ஸெப்டம்பர் மாதம் ஞாயிற்றுக்கிழமை யன்று நாம் ஆரம்பித்த மகத்தான முயற்சி திருவினையாகி விட்டது. உலக மக்களின் தீரத்தினுல் உலகம் நியாயமும், நீதியும் அர்த்தமற்ற வார்த்தைகளல்லவென்றும், அவைகள் மனிதர்கள் மனதில் பதித்துவைக்கக்கூடிய நிரந்தரமான அழிவற்ற வார்த்தைகள் என்றும் மறுமுறை ருஜூச் செய்திருக்கிறது.

நாஸிகளின் பேராசையின் தீமையை அறிந்தும், அதை முறியடிக்க அமைதியுடனும், பொறுமையுடனும் இருக்கவேண்டுமென்ற உறுதியுடனும் நாம் ஜெர்மனி பேரில் போர் தொடுத்தோம். ஜெர்மன் சவாலை ஒப்புக்கொண்டபொழுது ஜெர்மனியின் அபாரமான அகம்பாவத்தையும், இரக்கமின்மையையும் சமாளித்து நிற்க பிரிடனும், சாம்ராஜ்யமும் தயாராக இல்லை.

ஐந்து வருஷங்களுக்குமுன் ஹிட்லர் தற்காப்பற்ற ஹாலந்தில் குடைத்துருப்புகளை இறக்கினுன். நேசநாடுகளும், நடுநிலைமை பெற்ற நாடுகளும் ஜெர்மனியின் தீமையுள்ள முற்போக்கைத் தடுக்க சக்தியற்றவர்கள் என்று வெளிப்பட்டபொழுது பூர்ணமான யுத்தத்தின் அருத்தத்தை நாம் ஜெர்மனியிடமிருந்து அறிந்துகொண்டோம். ஆனுல் 1940-ம் வருஷம் மே மாதம் 10-ம் தேதி யன்று மிஸ்டர் சர்ச்சில் பிரிடனுக்குத் தலைமை வகிக்கும் பொருப்பை ஏற்றுக்கொண்டார்.

ஐரோப்பாவில் நாஸிகளை எதிர்த்து ஒரு ஸோல்ஜர்கூடப் போர்புரியாத காலமும் உண்டு. பிரிடனிலும், டங்கர்க்கிலிருந்து தப்பிவந்த நிராயுதபாணிகளான சிதைவுற்ற போர் வீரர்கள் தானிருந்தார்கள். அப்பொழுது மனிசர்களின் மானப்பான்மை எவ்விதமிருந்தது. அதற்கு இணை ஒன்றும் கிடையாது. ஸ்வதந்திரத்தின் கடைசி அரணுன பிரிடன் விழுந்து விடுமென்று உலகம் நினைத்திருந்தபொழுது இந்தத் தீவுகளின் மனிதர்களின் உணர்ச்சி புத்துயிர் பெற்று பொங்கியது. தோல்வியென்ற கோரமான தோற்றம் நம்பிக்கையை இழக்கும்படி செய்யாமல் எதிர்த்துப் போராடும்படி தூண்டிவிட்டது.

---

## டங்கர்க்குக்குப் பிந்திய வருஷங்கள்.

### நேசதேச வெற்றிகள்.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

உற்று நோக்காளர் என்ற முறையில் சென்ற ஐந்து வருஷங்களில் பிரிடிஷ் ஸோல்ஜர் அளவற்ற முறையில் உயர்வடைந்து விட்டான் என்பதை கவனித்திருக்கிறேன் என்று ஆலன் மோர்ஹெட் சொல்லியிருக்கிறுர்.

டங்கர்க் நிகழ்ச்சிக்குப்பின் அவன் யாதொரு தேர்ச்சியும் பெருதவன் என்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனுல் மனதிடமிருந்தது. ஆயுதங்களும், சாமர்த்தியமும் குறைவாக இருந்தன.

அதன்பின் ஆபிரிக்காவில் பயிற்சி ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவன் வெய்யிலில் அடிபட்டு, தேக ஆரோக்யமும், அதிக தந்திரமும், தன்னம்பிக்கையையும் அடைந்தான். ஐரோப்பாவைத் தாக்கியபொழுது அவன் பூராவாகத் தேர்ச்சிபெற்று விட்டான்.

ஐந்து வருஷங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது அவன் பெரிய உருவமாகி விட்டான். டங்கர்க்குப்பின் கைதியாகி இருந்த அநேக வாலிபர்கள் அவனுடைய சகோதரனைப் புகழுடனும் ஒரு சிறிது பொருமையுடனும் கவனித்து வந்தான்.

டங்கர்க்குப்பின் எவ்வளவு வெற்றிகள் கிடைத்திருக்கின்றன! எல்அலாமீன், டுனிஸ், ஸிஸிலி, ரோம், நார்மண்டி, ரைன்நதி, இந்த சாம்பல் குவியலுக்கு அடியில் ஹிட்லர் என்ற தீங்கிழைத்த பிசாசு தீக்கிரையாகிக்கிடக்கிறது.

# ஐரோப்பிய சமாதானத்துக்கு லண்டனின் மாறுதல்.

## அபாயச் சங்குகள் பழங் கதையாகிவிட்டன.

ஐரோப்பிய வெற்றி தினக்கொண்டாட்டம் முடிந்து விட்டதால் பிரிடனின் உள்நாட்டு முன்னணி ஐரோப்பிய சமாதானத்துக்குறிய நிலைமைக்குத்தகுந்தவாறு அமைத்துக்கொண்டு வருகிறது.

முதலாவது மாறுதலாக பொதுஜன தற்காப்பு சேனைப்படைகள் கலைக்கப்படுகின்றன. மே மாதம் 2-ம் தேதி நடு மத்தியானத்திலிருந்து தேசியவிமான எச்சரிக்கை திட்டமும் தொழிற்சாலைகள் எச்சரிக்கை திட்டமும் நிறுத்தப்பட்டன.

யுத்த ஆரம்பத்திலிருந்து லண்டன் வாசிகள் 1224 தடவை அபாயச்சங்கு ஒலிப்பதைக் கேட்டிருக்கிறார்கள். மார்ச்சு மாதம் 28-ம் தேதியன்று காலை 7.52-மணிக்கு லண்டனில் கடைசியாக அபாயச்சங்கு ஒலித்தது. நீடிப்பு ஆறு நிமிஷங்கள் வரையில் இருந்தது. யுத்தத்தின் கடைசி அபாயச்சங்கு ஏப்ரல் மாதம் 30-ம் தேதியன்று பிற்பகலில் அபேடீர்னிலும் மாண்ட்ரோஸிலும் ஒலிக்கப்பட்டது.

உத்தியோக முறையில் அமைக்கப்பட்ட அகதிகளின் ஸ்தாபனத்தின்படி லண்டனுக்கு வெளியிலிருந்து வரும் அகதிகள் குறிப்பான பிரதேசங்களில் வரவேற்கப்படுகிறார்கள். அவர்களின் பெரும்பான்மையோர் குழந்தைகளுடன் உள்ள ஸ்திரீகள். அகதிகள் ஒழுங்காகவும் ஏற்பாடாகவும் வெளியேறினார்கள். அவர்களை வரவேற்கவும் திட்டங்கள் போடப்பட்டுக் கையாளப்படுகின்றன.

அகதிகளைக் கண்காணிப்புச்செய்யும் சுகாதார மந்திரி இலாகா மே மாதம் 2-ம்தேதியன்று 1500 உள்நாட்டு அதிகாரிகளுக்குத் தந்தி அனுப்பிற்று. "லண்டனுக்குத் திரும்பும் திட்டத்தை நிறைவேற்றுங்கள்" என்று சொல்லப்பட்டது. முதல் முதலாக திரும்பிச் செல்ல எவ்வளவு பேர்களுக்கு வீடுகள் இருக்கின்றனவென்றும் எவ்வளவு பேர்களை உடன் காலத்தில் திருப்பி அனுப்பலாமென்றும் கணக்குத்தொகுக்கவேண்டும். எதிரி விமானத் தாக்குதல் ஆரம்பித்தபின் லண்டனிலுள்ள பதினாயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. அல்லது வாசத்திற்கு லாயக்கில்லாமல் போய்விட்டன. வீடு இல்லாதவர்களும் அங்கேயே தங்கியிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறார்கள்.

யுத்த ஆரம்பத்தில் பத்திரமான இடங்களுக்கு அனுப்பப்பட்ட பதினாயிரக்கணக்கான பிரிடனின் அபூர்வமான புத்தகங்களும், சரித்திரசம்பந்தமான தஸ்தாவேஜுகளும், வர்ண வேலைகளும், சிற்பங்களும், மற்ற கலா விசேஷங்களும், அவைகளுக்குரித்தான புத்தகசாலைகளுக்கும், மண்டபங்களுக்கும், கண்காக்ஷிகளுக்கும் திரும்பிக்கொண்டு வரப்படுகின்றன. டல்விச் மண்டபம் போன்றவைகள் V குண்டுகளால் அழிக்கப்பட்டதால் அவைகளைச்சேர்ந்த சாமான்கள் பத்திரத்துக்காக அனுப்பப்பட்ட இடங்களிலேயே தங்கும்படி நேரிட்டுவிட்டது.

டிரபால்கர் சதுக்கத்திலுள்ள நாஷனல் காலரிக்கு கூடிய சீக்கிரத்தில் மிகவும் அழகிய வர்ணங்களுள்ள 50 படங்கள் கொண்டுவரப்படும். யுத்தத்துக்குமுன் இருந்ததுபோல நாஷனல் காலரியை அலங்காரம் செய்ய நான்கு மாதங்கள் ஆகும்.

---

# நாஸி அபாயத்தின் பரிணமம்.

## துக்ககரமான முன் நடவடிக்கையின் படிப்பினை.

### டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை.

ஹிட்லரிஸம் என்ற பூதமானது விருத்தி அடைந்ததற்கு இந்த யுத்தத்துக்குமுன் நேசதேசங்களின் அலக்ஷிய புத்திதான் காரணமென்பதை வெற்றி கிடைத்த இத்தருணத்தில் நேசதேசத்தார்கள் மறந்துவிடக்கூடும். சுதந்திரத்திற்கு மறுபடியும் அபாயம் வராமல் இருக்கவேண்டுமானால் இந்த அபாயம் வளர்ந்துவந்தபொழுது உலகம் என்ன செய்து கொண்டிருந்தது என்பதை நாம் ஞாபகப் படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாகும். இங்கு ஆரம்பம் முதல் அந்தம்வரையில் சுருக்கமாக விவரிப்போம்.

1931-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜப்பானிய சேனை மஞ்சூரியாவைக் கைப்பற்ற ஆரம்பித்தபொழுது அடால்ப் ஹிட்லர் ஜெர்மனியில் தேர்தலுக்கு அபேக்ஷகராக நின்றான். அப்பொழுது ஹிட்லரிடம் ஏராளமான கோபாவேசமுள்ள வெறுப்புகள் மிகுதியாக இருந்தன. வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தை ஏற்படுத்திய அயல் நாட்டாரை அவன் வெறுத்தான். அதில் கையெழுத்திட்டவும், 1930-ம் வருஷம்வரையில் ஜெர்மனியின் நடவடிக்கையைக் கையாண்டவுமான குடியரசுக் கட்சியினரையும் அவன் வெறுத்தான். ஜனநாயகத்தின் மூலமாக அதிக முன்னேற்றமடைந்திருக்கும் தொழிலாளர் ஸ்தாபனத்தையும் அவன் வெறுத்தான். பொதுஉடைமைக் கட்சிக்காரர்களையும், கத்தோலியர்களையும், சர்வதேசப் பிரமுகர்களையும், சமாதான மனப்பான்மையுள்ளவரையும் அவன் வெறுத்தான்.

ரீக்ஸ்டாகில் ஹிட்லர் சிறுபான்மைக் கட்சியின் தலைவராக இருந்தபொழுது ஜனாதிபதி ஹிண்டன்பர்க் 1933-ம் வருஷம் ஜனவரி மீ 30உ அன்று ஹிட்லரை சான்ஸலராக நியமித்தான். ஹிட்லர் எண்ணியிருந்த அளவற்ற ஆசைகளை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நிறைவேற்றமுடியும்.

1935-ம் ஆண்டு மார்ச்சு மீ த்தில் வேர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தின் ராணுவ ஷரத்துகளை ரத்து செய்ததென்பது திடுக்கிடக்கூடியதாக இருந்தது. அடுத்தபடியாக கட்டாய சேவை திட்டம் அமுலுக்கு வந்தது. பொதுஜன விமானப்படை ராணுவ அமுலுக்கு மாற்றப்பட்டது. ஜெர்மனி நீர்மூழ்கிகளைக் கட்டிவந்தது. தரையில் ஹிட்லர் வெகு துரிதமாக முஸ்தீப்புகளைத் தயாரித்தான்.

ஒரு வருஷத்திற்குப்பின் வளர்ச்சிபெற்ற ஜெர்மன் சேனை ஒத்திகை செய்தபொழுது சேனையின் மேஜோடுகளின் சப்தம் ஐரோப்பாவைக் கலக்கியது. 1936-ம் ஆண்டு மார்ச்சு மீ 7உ அன்று வெர்ஸேல்ஸ் ஒப்பந்தப்படி ராணுவ ரக்ஷணையற்ற ரைன்நதிக்குக் கிழக்கிலுள்ள வட்டாரத்திற்குள் ஹிட்லர் துருப்புகளை அனுப்பினான்.

பிரெஞ்சு—ஜெர்மன் தற்காப்பு ஒப்பந்தத்துக்கு பதில்வெட்டாக ஒன்று வேண்டுமென்று பஸிபிக் பக்கம் ஹிட்லர் திருமபினான். 1936-ம் ஆண்டு நவம்பர் மீ 17உ அன்று சைனாவிலுள்ள ஜெர்மன் அக்கறைகளை பெரும்பாலும் தியாகம் செய்து ஜப்பானுடன் கோமிண்டர்னுக்கு எதிராக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டான். 1937-ம் ஆண்டு நவம்பர் மீ 6உ அன்று முஸோலினியும் பெர்லினுக்குச் சென்றிருந்தபொழுது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டான். அடுத்துவரும் வருஷங்களில் ஜப்பானும், ஜெர்மனியும், இதாலியும் ஒரே மாதிரியாக அக்கிரமப் போரை நடத்துவதற்கு இது முன்னறிக்கையாகும்.

### அதன்பின் யுத்தம் வரையில்.

1937-ம் வருஷம் மே மீ 28உ அன்று ஸ்டான்லி பால்ட்வினுக்குப்பின் நெவில் சேம்பர்லின் பிரதம மந்திரியானார். பிரிடனும் தீவிரமாக ஆயுதங்களை அதிகரித்துவந்தது. ஆகிலும் இரண்டாவது நான்கு வருஷ திட்டப்படி பிரிடனையும் பிரான்ஸையும்விட நாஸி ஜெர்மனி ஆயுதங்களை உற்பத்திசெய்ய அதிகப்பொருளை செலவிட்டுவந்தது. ஸ்பெயினில் உள்நாட்டுக் கலகம் நடந்துவந்தது. ஸ்பானிஷ் சேனைத் தலைவரான ஜெனரல் பிராங்கோவுக்கு முஸோலினியும், ஹிட்லரும் உதவி செய்ததினால் அவன் கட்சி வலுத்தது. ஜனநாயகங்கள் ஸ்பெயினிலும் சைனாவிலும் நடந்த போரை கவனித்துவந்தன. அப்பொழுது ஆஸ்திரியாவில் ஐந்து வருஷங்களாக நாஸிகள் தயார் செய்துவந்த ஐந்து வருஷ திட்டம் 1938-ம் வருஷம் உச்ச நிலையை அடைந்தது.

ஆஸ்திரிய நெருக்கடியின் முடிவு துரிதமாக ஏற்பட்டது. ஆஸ்திரியாவை நாஸி மயமாக்குவது துரிதமாகவும், கடுமையாகவும் நடைபெற்றது. மார்ச் 13உ அன்று ஜெர்மனியுடன் சேர்ந்துவிட்டதாக ஸேய்ஸ் இன்கார்ட் பறைசாற்றினன். அடுத்த நாள் ஜெர்மனியின் புதிய தேசத்தை ஆக்கிரமிக்க ஹிட்லர் வியன்னாவுக்குள் வெற்றிகரமாகச் சென்றான்.

செப்டம்பர் மீ த்தில் 1914-ம் வருஷத்திற்குப்பின் ஐரோப்பாவில் மறுபடியும் நெருக்கடி ஏற்பட்டது. செப்டம்பர் 15உயிலிருந்து செப்டம்பர் 29உயில் நடைபெற்ற இறுதி மியூனிக் மஹாநாட்டிற்குள் ஹிட்லரின் நிபந்தனைகள் அதிகமாயின. மியூனிக்கில் ஸூடேட்டன் பிரதேசத்தை அப்படியே ஜெர்மனிக்கு உடன்காலத்தில் கொடுத்துவிட வேண்டுமென்று அவன் வற்புறுத்தினான். அதிலிருந்து ஒன்றையும் எடுத்துச்செல்லக் கூடாது. யாதொரு ராணுவ சப்ளைகளையும், ஒரு பசுவையும், யாதொரு கோட்டைகளையும் நாசம் செய்யக்கூடாது.

அக்டோபர் 1உ அன்று காலையில் ஜெர்மன் சேனை யாதொரு எதிர்ப்புமின்றியிலும் ஸெக்கோஸ்லவேகியாவுக்குள் புகுந்தது.

**நாஸிகளின் தந்திரம்.**

மியூனிக்கில் ஹிட்லர் ஏமாற்றிவிட்டான் என்று பிரிடனும், பிரான்ஸும் இப்பொழுது அறிந்துவிட்டன. அநேக வருஷங்களாக, அவர்களுடன் ஹிட்லர் போர் நடத்திவந்தான் என்று அவர்கள் இப்பொழுதுதான் அறிகிறார்கள். அபாயத்தை உணர்ந்தும் ஆயத்த மில்லாமல் தாங்கள் போர்புரியவேண்டும் என்ற பீதியாலும் அவர்கள் தங்களுடைய மனப் பான்மையை மாற்றிக்கொண்டு ஆயுதங்களைத் தயாரிக்க முயன்றார்கள். பிரிடனின் ஐரோப்பியக் கொள்கையிலும் மாறுதல் ஏற்பட்டது. போலந்து, துருக்கி, ருமேனியா, கிரீஸ் முதலிய நாடுகளுக்கு பரஸ்பர உதவி செய்வதாக பிரிடன் வாக்களித்தது. புதிய சமாதான ஒப்பந்தத்தில் ருஷ்யாவையும் சேர்த்துக்கொள்ள பேசுவதற்காக ருஷ்யாவுக்கு ஒரு பிரிடிஷ் தூது கோஷ்டி சென்றது. ஆனால் அது காலந் தப்பியதாக ஆகிவிட்டது.

ருஷ்ய ஜெர்மன் அனுக்கிரமான ஒப்பந்தப்படி பொதுஉடைமைக் கொள்கையிலிருந்து ஐரோப்பாவின் ரக்ஷகர்கள் என்று தானாகப் பறைசாற்றிய ஜெர்மனி பொதுவுடைமைக் கொள்கையுள்ள ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்த ராஜதந்திரப் புரட்சி உலகத்தையே திடுக்கிடச் செய்தது.

ஹிட்லர் சம்பந்தப்பட்டமட்டில் இந்த ஒப்பந்தம் போலந்தை ராணுவ முறையில் துணித்துவிடுவதை உறுதி செய்தது. ஐரோப்பிய யுத்தம் இந்த ஒப்பந்தம் கையெழுத்திட்ட ஒருவாரத்துக்குள் துவங்கிற்று. ஸெப்டம்பர்மீ 1உ அன்று விடியற்காலத்தில் ஹிட்லர் 90 காலாட்படை டிவிஷன்களுடனும், 9 கவசம்பூண்ட படைகளுடனும், 6,500 விமானங் களுடனும் போலந்தைத் தாக்கினான். போலந்து குவித்துவைத்திருந்த 42 காலாட்படை டிவிஷன்களும் குதிரைப்படைகளும் வெகு சீக்கிரத்தில் அழிக்கப்பட்டன.

---

## மிகவும் அபாயம் பொருந்திய எதிரி.

**நியூஸ் கிரானிகள் பத்திரிகை.**

ஐரோப்பாவில் வெற்றி கிடைத்த இச்சமயத்தில் நாம் அழகான அடுக்குத்தொடர்களைச் சொல்வதினால் பிரயோஜனமில்லை.

சந்தோஷமும், துக்கமும், நம்பிக்கையும் காணப்படும் இந்த தருணத்தில் நாம் நன்றி செலுத்துவதில் தான் நமது உணர்ச்சி பூராவையும் செலுத்த வேண்டும். எல்லோரையும் விட ஒருவர் நம்முடைய நன்றி செலுத்துவதற்குப் பாத்திரமாவார். தேசத்தின் நிர்வாகங் களில் நெருக்கடியான சமயத்தில் எவரும் இவரைப்போல ஜனங்களின் மனஉறுதியை உறு வெடுத்திருக்கவில்லை.

குதூகலப்பட நமக்கு உரிமையிருந்தாலும் நமது ஆனந்தம் மிதமாகவே இருக்கவேண்டும். பீரங்கி சப்தம் ஓய்ந்துவிட்டதால் போர் முடிவடையவில்லை. போர் ஜெனரல்களிடமிருந்து ராஜதந்திரிகள் வசம் வந்துவிட்டது. பொதுவான ஸோல்ஜர்களிடமிருந்து போர் பொது மக்கள் கைக்கு வந்து விட்டது. ஜனநாயகம் என்பது அபிவிருத்தியடையக் கூடியது. அது வெற்றி கிடைத்தஉடன் நின்றுவிடக் கூடியதில்லை. அது சுறுசுறுப்புடன் வேலை செய்ய வேண்டும். அதைச் சுற்றிலும் எதிரிகள் இருக்கிறார்கள். சமாதானம் கடுமையாக இருக்கும். ஆகிலும் ஜெர்மனியைவிட பலமான சிரமசாத்தியமான எதிரியிருக்கிறான். இறுதியில், வெறுப்பைவிட அன்புதான் மானிடவர்க்கத்தைக் காப்பாற்ற முடியும்.

---

## நெருக்கடியின்பொழுது தோன்றினார்.

**சர்ச்சில், வெற்றியின் சிற்பி.**

(இங்கிலிஷ் ஸ்பிரிட் என்னும் பத்திரிகையின் ஆசிரியரான A. L. ரௌஸ்).

ஐந்து வருஷங்களுக்கு முன் 1940-ம் வருஷம் மேமீ 10உ அன்று சர்ச்சில் பிரதம மந்திரி பதவி ஏற்றார். இவ்வருஷங்கள் நவீன சரித்திரத்தில் மிகவும் இருட்டுள்ள அபாயம்

பொருந்திய வீரத்தன்மையுள்ள 5 வருஷங்களாகும். இந்தப் புயல் காற்றும், நீண்டகால பொருமையும், இருதி வெற்றியும் உள்ள ஐந்து வருஷங்களில் சர்ச்சில்தான் ஜனங்களை உத்ஸாகப்படுத்திய புருஷராக இருந்தார்.

பிரிடனுக்கு மிகவும் நெருக்கடியான சமயத்தில் சர்ச்சில் பிரதம மந்திரியாகவும், தேசத்தின் தலைவருமாக ஆனார். 1940-ம் வருஷ வசந்தகாலத்தில் ஜெர்மனி நார்வேயையும், டென்மார்க்கையும் வீழ்த்திவிட்டது. சர்ச்சில் பிரதம மந்திரியானதன்று ஹாலந்தும், பெல்ஜியமும் படையெடுக்கப்பட்டது. ஒரு மாதத்திற்குள்ளாக பிரான்ஸ் நசுக்கப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து நாம் டங்கர்க் வழியாக பின்வாங்கினோம். அந்த நெருக்கடியான நாளில் அவருடைய மனோதைரியம் குன்றவில்லை. அவர் ஜனங்களிடம் அபிப்பிராயத்தை வெளியிட்டு, உத்ஸாகம் ஊட்டி, தைரியத்தை நிலைநாட்டி உறுதியைப் பலப்படுத்தினார்.

அந்த நெருக்கடியான சமயத்திலும் இங்கிலீஷ் மக்களின் திடத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர்கள் நிம்மதியாகவும், நெஞ்சம் கலங்காமலும் இருந்துவந்தார்கள். மிகவும் கோரமான அபாயத்தின்பொழுதும் அவர்கள் உல்லாசமாகவும், நல்ல மனப்பான்மையுடனும் இருந்துவந்தனர். அவர்களுக்குத் தேவையானது தலைவர்கள் தான். அவர்களுக்கு இயற்கையான தைரியத்திற்கு நாயகம் அவசியமாயிற்று. மிகவும் உயர்வான தலைவர் அப்பொழுது தோன்றினார்.

கடைசியில் அவர்களுக்குத் தகுதியான தலைவர் அகப்பட்டார். மஹா பிட்டுகளின் நாட்களுக்குப்பின் இவ்விதமான தலைவர் தோன்றவில்லை. என் நாட்டை நான்தான் காப்பாற்ற முடியும், மற்றொருவரும் முடியாது என்று சொன்னார்.

உண்மை யாதெனில் ஆங்கிலேயர்களின் சுபாவ குணங்களான விடாப்பிடிப்பும், நல்ல மனோநிலையும், போர் புரியும் ஆர்வமும் சர்ச்சிலிடம் உருவெடுத்துவிட்டன. சரித்திரத்தில் அபூர்வமான சமயங்களில் தோன்றுவதுபோல் நல்ல தருணத்தில் அவர் தோன்றினார்.

1940-ம் வருஷ மே மாதத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவை நாம் ஞாபகப்படுத்திக் கொள்வோம். நாம் மிகவும் கோரமான கஷ்டங்களை தாண்டவேண்டும். நாம் அநேக மாதங்கள் வரை பிரயாசைப்படவேண்டும். கஷ்டப்படவேண்டும். நம்முடைய கொள்கை என்னவென்று நீங்கள் கேட்கிறீர்கள். கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் நம்முடைய சக்தியுடன் கடவுள் அளிக்கும் பூரா பலத்துடனும் போர்புரிய வேண்டுமென்றும் மனிதர்களின் குற்ற ஜாப்தாவில் சமானமில்லாத அக்கிரமக் கொடுங்கோலையும் எதிர்த்து நாம் போர் புரியவேண்டும் என்றும் சொல்லுகிறேன். நமது லக்ஷியம் என்ன என்று கேட்கிறீர்கள். நான் அதற்கு ஒரு வார்த்தையில் பதில் சொல்லுகிறேன். வெற்றி—எப்பாடுபட்டும் வெற்றி—எந்தக் கஷ்டங்களுக்குட்பட்டாலும் வெற்றி—அதற்கான ரஸ்தா எவ்வளவு நீளமாகவும், கடினமாகவும் இருந்தாலும் வெற்றி—ஏனென்றால் வெற்றியில்லாமல் பிழைத்திருக்க முடியாது.

இந்த நடவடிக்கைகளில் பிரதம மந்திரியின் பங்கு என்ன? அவருடைய பேருதவியின் முக்கியத்தையும் உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் அவருடைய சகாக்களுடன் அவர் ஏற்றுக்கொண்ட வேலையின் பொறுப்பையும் நாம் எவ்விதம் மதிப்பது? அல்லது பாராட்டுவது? சரி. அவருடைய பொதுஜன நடவடிக்கையை நாம் அறிவோம். சொற்பொழிவுகள், ஒலிபெருக்கிகள், நாடெங்கும் அடிக்கடி பார்வையிடுவது, முக்கியமாக வெடிகுண்டு வீச்சுக்குட்பட்ட நகரங்களைப் பார்வையிடுவது, அயல்நாடுகளுக்குப் பிரயாணம் செய்வது, வாஷிங்டன், மாஸ்கோ, காஸாபிளாங்கா, டெஹரான், யால்டா முதலிய இடங்களுக்குச் செல்வது. பொதுஜனங்களால் அறியக்கூடாத வேலைகளை அவர் செய்திருக்கிறார் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்பற்றி நமக்கு கொஞ்சமேனும் தெரியவராது. அது ஒரு பனிக்கட்டியைப் போன்றது. அதன் முக்கியமான பாகம் மேல் மட்டத்துக்குக் கீழே இருக்கிறது. அது எளிதில் காணக்கூடாதது. ஆகிலும் அதன் பயனை நாம் காண்கிறோம். மூன்றாவது ஜெர்மன் ரீஷ் ஆயிரம் சுக்குகளாக நொருங்கி மறைந்துவிட்டது.

முதலாவதாக பிரிடனின் எதிர்ப்பின் தலைவராக அவர் நடந்துகொண்டார். இதுதான் முதன்முதலில் நமது கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் கவர்கிறது.

அவர் பிரிடனின் எதிர்ப்புத் தலைவர் மட்டும் அல்ல. ஹிட்லருக்கு அடிபணிய மறுத்த ஐரோப்பாவிலுள்ள சுதந்திர மக்களின் எதிர்ப்பிலும் அவர் கலந்துகொண்டார். 1940-ம்

வருஷத்தில் அவர் பிரெஞ்சு ஜனங்களுக்கு ஒலிபெருக்கிய செய்தியை "ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். நாங்கள் நின்றுவிடமாட்டோம். சோர்வடைய மாட்டோம். அடிபணியமாட்டோம். பிரிடனும், சாம்ராஜ்ய நாடுகளும் ஐரோப்பாவுக்கு ஏற்பட்டிருக்கும் நாஸி என்ற தொத்து வியாதியை நிவர்த்திக்கவும், உலகத்தை புதிதாக தோன்றியிருக்கும் அஞ்ஞானத்திலிருந்து காப்பாற்றவும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறோம். வந்தனம். இரவில் தூங்கி காலையில் பலத்தைத் திரட்டுங்கள். நிச்சயமாக பொழுது விடியும்." ஜன நாயகத்துக்கு மிகவும் முக்கியத்துவம் உள்ள ஸ்வயமாகவே ஜனங்கள் தங்களுடைய சிறந்த முயற்சிகளைச் செய்யவேண்டும் என்ற உத்சாகத்தை ஊட்டுவதில் அவரை மிஞ்சியவர் ஒருவருமில்லை.

அடுத்தபடியாக யுத்தத்தில் வெற்றிபெற அவர் செய்த பேருதவியின் முக்கியமான அம்சத்தை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அதாவது ராஜிய, ராணுவ, தந்திரத்தில் அவருடைய சம்பந்தமும் சேவையும், இப்போது பொதுஜனங்களுக்கு முக்கியமாகத்தோன்றாத அவருடைய சேவைகள் இவ்வருஷத்திய சரித்திரங்கள் வரையப்படும்பொழுது பிரசித்தப்படும்.

முதன்முதலாக யுத்த தந்திரத்தில் அவருக்குள்ள நீண்டகாலத் திட்டம் யுத்தம் மூளு முன்னமே ஜெர்மனியின் உலக ஆதிக்கப் பேராசையை ஒழிப்பதற்கு சரியான ஏற்பாடு. ஐரோப்பாவிலுள்ள அபாயத்துக்குட்பட்ட எல்லா வல்லரசுகளையும் ஒரு சமஷ்டியில் சேர்க்க வேண்டும் என்பதுதான் அவருடைய திட்டம். அதைப் பூர்த்தி செய்ய அகில பிரிடன், அமெரிக்க, ருஷ்யா என்ற மூன்று வல்லரசுகளும் ஒன்று சேரவேண்டுமென்றும் அவர் கண்டு கொண்டார்.

ஹிட்லர் ருஷ்யாவைத் தாக்கிய உடன் சர்ச்சில் உடன்காலத்திலேயே சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்தி ராஜ தந்திரத்தின் மேன்மையான நடவடிக்கையாக ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டாரென்பது தேசத்திற்கு அவர் செய்த மகத்தான சேவை என்றும், யுத்தப்போக்கை மாற்றக்கூடிய ஒரு முக்கியமான கட்டம் என்றும் நான் நினைக்கிறேன். அவரைப்போல மற்ற எவரும் தேசம் பூராவையும் ஒன்று திரட்டியிருக்க முடியாது. தேசத்தின் அக்கறைதான் அவருக்கு முக்கியத்துவம் உள்ளதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. எல்லாவற்றையும்விட முக்கியமாக இறந்துபோன ஜனாதிபதியினுடனும், ஸ்டாலினுடனும் சர்ச்சில் நெருங்கிப் பழகிவந்ததின்மூலம் அவர் செய்த சேவை பெரிதும் முக்கியத்துவமுள்ளது. இந்த மூவர் கோஷ்டியில் சர்ச்சில்தான் தொடர்பு ஏற்படுத்துகிறவர். அவரில்லாதபோனால் இந்த மூவர் ஒப்பந்தம் வேலை செய்திருக்காது. மத்தியில் சர்ச்சில் இருந்ததால் அவர் மற்ற இருவர்களுக்கும் தொடர்புக் கோர்வையாக இருந்தார். மூவர் கட்சி நிலைத்திருந்தது. ஒப்பந்தம் உறுதியாக நின்றது. இப்பொழுது உலகம் விடுதலை பெற்றுவிட்டது. சர்ச்சில் அதில் சதாகாலமும் உறுதியுடன் உழைத்துவந்தார்.

சரித்திரக்காரர் என்ற முறையில் நான் சொல்லுகிறேன். அவருடைய தீரமும் தீர்க்க ஆலோசனையும் சரித்திரத்தில் அவருக்கு எவரையும்விட இரண்டாவது ஸ்தானம் அளிக்காதுடன் பிரதம மந்திரிகள் ஜாப்தாவில் அவருக்கு அபாரமான கியாதியையும் முதல் ஸ்தானத்தையும் அளித்துவிட்டது.

இவ்வளவு மகிமையும் அபாரமான சகிப்புத் தன்மையும் பரிச்சிரமத்தினால் ஏற்பட்ட விடுதலையும் உள்ள நாளில் வாழ்கிறோம் என்று நாம் சந்தோஷப்படலாம்.

---

# சாயையிலிருந்து சூரிய வெளிச்சம்.

## சர்ச்சிலின் சொற்பொழிவுகள்.

### 1940

**ரத்தமும் கண்ணீரும் :**

மே 13. "ரத்தமும், கண்ணீரும், வியர்வையும் தவிர என்னிடம் தரக்கூடியது ஒன்றுமில்லை" 'பிரதம மந்திரியான பினி மூன்று நாட்களுக்குப்பின்'.

ஜூன் 4. "நாம் முடிவு வரையில் போராடுவோம்—நாம் கடல்களிலும், சமுத்திரங்களிலும் போரை நடத்துவோம். நாங்கள் கடற்கரைகளில் போரை நடத்துவோம். படைகள் இறங்கும் இடங்களில் போரை நடத்துவோம். வயல்களிலும், தெருக்களிலும், மலைகளிலும் போரை நடத்துவோம். நாம் ஒருபொழுதும் சரண் அடைய மாட்டோம்."

ஜூன் 18. நம்மை இந்தத் தீவில் முறியடிக்கவேண்டும் அல்லது போரை இழக்க வேண்டுமென்று ஹிட்லர் அறிவான். நாம் அவனை சமாளித்துவிட்டால் ஐரோப்பா விடுதலையடையும். உலக வாழ்க்கை விசாலமான, சூர்ய வெப்பம் நிரம்பிய நிலைமையை அடைந்துவிடும். பிரிடிஷ் சாம்ராஜ்யமும், குடியேற்ற நாடுகளும் ஆயிரம் வருஷங்கள் நிலைத்திருக்கவேண்டுமானால் இதுதான் பிரிடனின் சிறந்த காலம் என்று சொல்லும்படியாக நாம் நடந்துகொள்ளவேண்டும்.

ஆகஸ்டு 20. எதிரியின் சங்கிலியைக்கண்டு கலங்காமலும், அபாயத்தைத் தடுப்பதில் சோர்வன்னியிலும், பிரிடிஷ் விமானிகள் உலக யுத்தப்போக்கை அவர்கள் தீரத்தினாலும், விசுவாசத்தினாலும் மாற்றி வருகிறார்கள். மனித வர்க்கத்தின் போரில் அநேகர்கள் ஒரு சிலருக்கு இது வரையில் இவ்வளவு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கவில்லை.

## 1941

**ஆயுதங்களைக் கொடுங்கள் :**

பிப்ரவரி 9. இந்த இருள் மிகுந்த மாரி காலத்தில் எதிரி நம் நாட்டின் பேரில் மூன்று அல்லது நான்கு மடங்குள்ள வெடி குண்டுகளைப் போட்டிருக்கிறான். வெகு சீக்கிரத்தில் இந்த அளவு தலைகீழாக மாறி விடுவதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம். நாம் முயற்சிகளை கைவிடக்கூடாது. தளர்ச்சியடையும் படிக்கும் விடக்கூடாது. நாம் பலஹீன மடைய மாட்டோம், அல்லது சோர்வடைய மாட்டோம். எங்களுக்கு ஆயுதங்களை வழங்குங்கள், நாம் வேலையை முடித்துவிடுவோம்."

டிஸம்பர் 11. ருஷ்யாவில் நாஸிகள் படையெடுத்ததென்பது சரித்திரத்திலேயே ஹிட்லர் செய்த ஒரு பெரிய தவறாகும்.

டிஸம்பர் 26. அமெரிக்காவினுடையவும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தினுடையவும் ஐசுவரியங்களை கவனிக்கும்பொழுது ஜப்பானியர்களின் நடவடிக்கை சாவதானமானதென்றாவது, அல்லது புத்திசாலித்தனம் உள்ளதா என்றாவது நினைக்க இடமில்லை. நாம் எவ்விதமான ஜனங்கள் என்று ஜப்பானியர்கள் நினைக்கிறார்கள்?

## 1942

**ஆரம்பத்தின் முடிவு :**

ஜனவரி 1. சென்ற வருஷம் நாம் சிரமப்பட்டோம். அடுத்த வருஷத்தில் நாம் கடும் போரை நடத்தவேண்டும். அபாயத்துக்குட்படவேண்டும். வெற்றிக்காக நாம் அரும்பாடு படவேண்டும்.

மே 10. மனித வர்க்கத்தின் பேரில் கொடுமைகளை அவிழ்த்து விட்டவர்களே இப்பொழுது சிக்ஷாரூபமாக நமது விமானத் தாக்குதலை உணர்கிறார்கள் என்பது ஈஸ்வரனின் தண்டனை முறை என்று நான் வரவேற்கிறேன்.

நவம்பர் 10. எல் அலாமீனில் நமக்கு சிலாக்கியமான குறிப்பான வெற்றி கிடைத்திருக்கிறது. நமது ஸோல்ஜர்களுக்கு பிரகாசம் தோன்றிவிட்டது. நமக்கு சந்தோஷமும், உத்ஸாகமும் உண்டாகிறது. இது முடிவல்ல. முடிவின் ஆரம்பமும் அல்ல. இது ஆரம்பத்தின் முடிவாகும்.

## 1943

**கார்ப்போரலின் தூண்டுதல் :**

மே 19. வடக்கு ஆபிரிக்காவில் எதிர்பாராதது நமது திட்டத்திற்கு உதவி செய்து விளைவுகளை அதிகரித்தது. இதற்கு நாம் கார்ப்போரல் ஹிட்லரின் ராணுவ திட்டத்திற்கு நன்றி செலுத்தவேண்டும்.

ஸெப்டம்பர் 21. நேசதேசத்தார்கள் இதாலியக் கடற்படையை பிடித்துவிட்டார்கள். அதைவிட வலுவான பிரிடிஷ் கடற்படை விடுவிக்கப்பட்டது.

## 1944

**ஜெர்மன் பூமியில் நேசதேசத்தார்கள் :**

பிப்ரவரி 22. ஜெர்மானியர்கள் ஓட்டியில்லா விமானங்கள் மூலமோ அல்லது அவுட் வான்களின் மூலமோ அல்லது இரண்டினாலோ தாக்கும் புதிய முறைகளை தயார் செய்து வருகிறார்கள் என்பது நிச்சயம்.

ஜூன் 6. ஐரோப்பாவில் முதல் முதலில் படையெடுப்பு இப்பொழுது ஏற்பட்டுவிட்டது.

நவம்பர் 9. ரோம், ஆதென்ஸ், பாரிஸ், பிரஸ்ஸல்ஸ் விடுவிக்கப்பட்டன.

## 1945

**அக்கிரம கோஷ்டியாரை நிர்மூலமாக்குவது :**

ஜனவரி 1. சில மாதங்களுக்குள் துர்தசையை அடைந்த ஐரோப்பாவில் வெகு காலமாக ஆதிக்கம் பெற்றிருந்த அக்கிரம கூட்டத்தார்கள் அழிக்கப்படுவார்கள்.

### " நாங்கள் வருகிறோம் "

### ஜப்பானிய ஆக்கிரமிப்புக்குட்பட்ட நாடுகளுக்கு சர்ச்சிலின் செய்தி.

மாட்சிதங்கிய மன்னர்பிரானின் நிர்வாகத்தின் சார்பாக நான் உங்களுக்கு ஒரு செய்தியை அனுப்புகிறேன். ஐரோப்பாவில யுத்தம் முடிந்துவிட்டது. இந்தப் போரில் நேசதேசத்தார்கள் பூரணமான சிலாக்கியமான வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். இன்று பிரிட்டனும், அமெரிக்காவும், ருஷ்யாவும் உத்தியோக முறையில் யுத்தம் முடிந்துவிட்டது என்று சொல்லி விட்டார்கள்.

ஆறு வருஷங்களாக நடத்திய கடும்போருக்குப்பின் ஐரோப்பாவில் யுத்தம் நின்று விட்டது. அடிமைப்பட்டிருந்த மிலியன்கள் கணக்கானவர்கள் கெடுதலான நாஸிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலிருந்து நீங்களும் விடுதலை பெறும் காலம் சமீபித்துவிட்டதென்று எண்ணுங்கள். இன்று எங்கள் ஞாபகம் உங்கள் பேரில்தான் இருக்கிறது. பிரிடிஷ், சாம்ராஜ்யம், அமெரிக்கா மற்ற நேசநாடுகளின் கவசம்பூண்ட படைகள் ஒன்றுபட்டு ஜப்பானைத் தாக்க விடுவிக்கப்பட்டுவிட்டன.

நாங்கள் எவ்வளவு சாதித்திருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எங்களுடைய முயற்சியில் கொஞ்சமும் தளர்ச்சி ஏற்படாது. உங்களுக்கு ஸ்வதந்திரம் கிடைக்கும் வரையில் யுத்தம் முடிவடைந்ததாக ஆகாது என்று நாங்கள் அறிவோம். தைரியமாக இருந்து இன்று எங்களுடன் சேர்ந்து குதூகலப்படுங்கள். என்னுடைய வார்த்தைகளையும் செய்தியையும் உங்கள் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் எட்டும்படி செய்யுங்கள். ஈஸ்வரனிடம் வழிபடுங்கள், நாங்கள் வருகிறோம். மே 8, 1945.

---

# கடலில் அலைந்து திரியும் வீரர்கள்.

## கண்டங்களை ஒன்றுபடுத்தும் தீரம்.

ஜேம்ஸ் ஹான்லி.

பிரிடிஷ் மக்களிடம் கடற்படை உணர்ச்சி ரத்தத்தில் ஊறியிருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் அதைத்தான் சுவாஸித்துவருகிறது. பிரிடன் பிழைத்திருப்பதற்கு கடலைத்தான் நம்பியிருக்கிறது. இன்று சாதாரணமான மாலுமி அதை கிரியாம்சையில் செய்து காட்டிப் பறை சாற்றிவருகிறான்.

இவன்தான் உலகத்திலேயே மகத்தான சகோதர பாவமுள்ளவன். உலகத்தின் எல்லா சமுத்திரங்களிலும் அலைந்து திரியும் ஜாதியார், கண்டங்களை ஒன்றுபடுத்துகிறவன். உலகத்துக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டபொழுது அமைதியுடனும், நம்பிக்கையுடனும் இருந்து வந்த அநேக தேசங்களை ஒன்றுபடுத்தியவன். கடைசியாக தனிப்பட்டவர்களின் ஜவாப்தாரித்துவத்தை உணர்ந்து நடந்துகொண்டவன்.

இந்தப் பொறுப்புதான் கடற்படையினுடையவும், மாலுமிகளுடையவும் முக்கியமான திட்டம். இந்த மாலுமிதான் அவனுடைய நிம்மதியைக் கைவிடாது, அவனுடைய வேலையைச் செய்துவந்தான். ஏனென்றால் அது அவனுக்கு ஏற்பட்ட கடமையாகும். இந்த வேலையை அவன் நரகவேதனைக்குட்பட்டுச் செய்துவந்தான். அவன் ராக்ஷஸனா அல்லது அமானுஷமான சக்தி உள்ளவனா? அவன் உங்களையும் என்னையும்போல சாதாரண மனிதன்தான். நாம் ஒரு பிரிடிஷ் மாலுமியை வர்ணிப்போம்.

அவன் உயரமாகவோ, குட்டையாகவோ, பருமனாகவோ, மெல்லிய சரீரத்துடனோ தெருக்களில் செல்லுவான். அவன்தான் கடலில் செல்லுகிறவனென்றும் அவனிடம் தரைப்படைகள் அறியக்கூடாத அபாரமான சக்தியிருக்கிறதென்றும் ஒருவரும் அறியமாட்டார்கள். பழைய மாலுமி நீல ஸெர்ஜ் சட்டைகளையும், வெண்மை கழுத்துக் குட்டைகளையும், நீண்ட கால் சல்லடங்களையும், குல்லாயையும், தமாஷா சமயங்களில் பௌலர் தொப்பியையும்,

அழகான சிகப்பு வர்ணமுள்ள ஜோடுகளையும் அணிந்து செல்வான். அவன் புகையிலையை மெல்லுவான். கப்பலில் செல்லும்பொழுது, அவனிடம் தனியாகப் படுக்கையும், உணவுப் பொருள்களும் இருக்கும். துறைமுகங்களிலிருந்து பெரிய கப்பல்களை வெளியே நடத்தி சாதாரணமான ஆயுதங்களைக்கொண்டு அக்கப்பல்களை உலகம் பூராவிலும் ஓட்டிச்செல்லுவான்.

அவன் ஜீவனத்துக்கு கஷ்டப்பட்டான். அவன் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருந்தது. ஆனால் அவன் வருத்தப்படவில்லை. அவன் பூர்ணமான நம்பிக்கையுடன் கடலில் சேவை செய்துவந்தான். கப்பல்கள் வானத்தில் மறைந்துவிட்டன. கப்பலின் புகை மட்டும்தான் காணப்பட்டது.

அதன்பின் திடீரென்று அவன் மறைந்தான். ஏதாவது ஒரு சமயம் அவன் பெரிய துறைமுகங்களில் தோன்றுவான். அவனுடைய வாழ்க்கை முறை உயர்ந்திருக்கும். காலமும் முன்னேற்றமும் அவனை வெகுதூரம் கடத்திச் சென்றிருக்கும். அவனைக் கண்டுபிடிப்பது அரிது. அவன் ஏதாவது ஒரு மூலையில் சேவை செய்துவருவான். அவன் அவனுடைய கப்பல் மறைந்ததுபோல் மறைந்திருப்பான். ஆனால் அது நிரந்தரமானதல்ல.

பழைய மாலுமி 60, 70, 75 வயதில் ரியாதிபெற்றான். அவனுடைய சாதாரண சேவையிலிருந்து முன்வந்தான். பரிக்ஷை காலம் வந்தது. அவனுக்குச் சிறந்த அனுபவம் இருந்தது. அவனுடைய சாதுர்யமும் போய்விடவில்லை. அவன் தீரத்துடன் கப்பலை ஓட்டி ரியாதிபெற்றான். வாலிபர்கள் அவனைப் போற்றினார்கள். அவர்களையும் அவன் நன்கு மதித்தான்.

அவர்களை அவன் கடைக்கண்ணால் பார்த்தான். அவர்களின் ஆடை வேறுவிதமாக இருக்கிறது. அவர்களின் பழக்க வழக்கங்கள் அவனுக்குப் புதியவைகள். அவர்கள் தோள்களில் வெண்மை பைகளை சுமந்து செல்லவில்லை. முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. வாலிபர்கள் முன்னிருந்த பழக்கத்தைவிட்டு கப்பலில் எல்லா வேலைகளிலும் ஈடுபட்டார்கள். இதைப்பற்றி ஒரு சந்தேகமும் வேண்டியதில்லை.

பழைய மாலுமி புதிய மாலுமிகளை வரவேற்றான். அவர்கள் ஒருவர் மற்றொருவரை கப்பலின் மேல்தட்டிலும், இஞ்சின் அறையிலும், தீப்பற்றி எறியும்பொழுதும், கட்டைகளில் மிதந்துசெல்லும்பொழுதும் வந்தனம் செய்தார்கள். எல்லோரிடமும் ஒரேமாதிரியான நற்குணங்களும் பழக்க வழக்கங்களும், காணப்பட்டன. அவர்கள் ஒரே தொழிலைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சாதாரணமான பணிவுள்ள மனிதர்கள்தான்.

ஆகாயத்திலுள்ள நக்ஷத்திர மண்டலங்களும் அகாதமான சமுத்திரமும் அவர்களின் வாழ்க்கையை பாதித்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய வேலையை பக்தியுடன் செய்து முடித்தார்கள். அவர்கள் அதற்காகப் பாடுபட்டு, கஷ்டங்களை அனுபவித்து வறுமைக் குட்பட்டு உயிர்துறந்தார்கள். ஏனென்றால் அவர்கள் அபாரமான பொருப்பை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அவர்கள்தான் பிரிடிஷ் மக்களுக்கு ஆகார வசதியை அளித்தவர்கள்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது பிரிடிஷ் கடற்படையில் 12,000 சாமான் கப்பலோட்டிகள் சேர்ந்துகொண்டார்கள். அதற்கு ஒரு வருஷத்திற்குமுன் சந்தர்ப்பம் ஏற்பட்டால் கடற்படைக்கு வாலண்டியர்கள் வரவேண்டுமென்று அரசாங்கம் வேண்டுகோளை விடுத்தது. அதற்கு நல்ல முறையில் உத்தரவாதமும் கிடைத்தது.

1941-ம் வருஷம் வஸந்தகாலத்தில் 59,000 ஆபீஸர்களும், மனிதர்களும் தானாகவே சேர்ந்துகொண்டார்கள். அது செய்யும் வேலையைக் கவனிக்கும்பொழுது சாமான் கப்பற்படை பெரிதல்லவென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. பிரிடனைச் சேர்ந்தவர்கள் 1942-ம் ஜூன் மாதத்தில் 1,20,000—4,550 மாஸ்டர்கள், 12,950 மேல்தட்டு ஆபீஸர்கள், 19,800 இஞ்சினியர்கள், 35,400 மேல்தட்டு வேலைக்காரர்கள், 29.000 இஞ்சின் அறை வேலையாட்கள், 17,400 ஸ்வேர்ட்கள். இவர்களில் அநேகர் கப்பற்படையை விட்டு அநேக வருஷங்களுக்கு முன் சென்றுவிட்டார்கள். அதைவிட்டு ஒரு வகையாக வந்துவிட்டோமென்றும் அவர்கள் பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். ஆகிலும் அவசியம் ஏற்பட்டபொழுது அவர்கள் தங்களுடைய வேலையை ஒப்புக்கொண்டார்கள்.

அவர்கள் மனித அன்பை இழந்துவிட்டார்களென்று நினைக்கவேண்டாம். கப்பலில் புயலும், சுரங்க வெடிகள் வெடிகுண்டுகளின் அபாயத்துக்குட்பட்டும், கட்டைகளில் மிதந்து

கொண்டு அபாயத்துக்குட்பட்டும், சென்றபொழுதும் அவர்கள் மனைவியையும், குழந்தைகளை யும், உறவினர்களையும் பற்றி சிந்தித்துவந்தார்கள். மாலுமிகளைப்போல் அவர்களும் குடும் பத்தைப்பற்றி கவலைகொண்டார்கள்.

வாலிபமுள்ளவர்களும், வயது முதிர்ந்தவர்களும், ஒரே விதமாக எண்ணங்கொண்டு காரியாம்சையில் செய்து முடித்தார்கள். இவ்விதமாக அவர்கள் தொன்று தொட்டு செய்து வந்தார்கள். இது ஒரு கடமையென்று அவர்கள் செய்து வந்தார்கள். இதேபோல் கப்பல்களை ஓட்டுவதும், ஆயுதங்களையும், மனிதர்களையும், உணவுப் பொருள்களையும் சுமந்து செல்லுவதும், ஒரு கடமை என்று அவர்கள் எண்ணினார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் கூட்டத்தில் கவனிக் கப்படாமல் அசைந்து செல்லுகிறார்கள். அவர்கள் தரையில் நிம்மதியுடன் இருக்கவில்லை. தரையிலுள்ளவர்களுக்கும் அவர்களுக்கும் ஒரு சிறிது சம்பந்தம் உண்டென்று அவர்கள் இப் பொழுது அறிந்துவிட்டார்கள்.

அதைக்கண்டு அவன் திருப்தியடைகிறான். இந்த மதிப்பை அவன் சம்பாதித்தானென் பதில் அவனுக்கு திருப்தி உண்டு. அவனைப் போற்ற கொடிகளும் பாண்டும், ஏற்பாடு செய்யப் படவில்லை. சேவைகள் அவன் வெகுகாலமாகப் பரிபாலித்து வந்ததை அழித்துவிடுமென்று அவன் அறிவான். அவனுக்குள்ள ஒழுங்கு முறை, கடமை என்ற உணர்ச்சியுடன், அதிக கியாதி இல்லாமலிருக்கவேண்டுமென்ற தோற்றமும் அவன் ரத்தத்தில் ஊறியிருக்கிறது.

---

# சேனைகளின் உயர்தர கமாண்டர்.

## சரித்திரத்தில் ஈஸன்ஹவரின் ஸ்தானம்.

### ஜான் தாம்ப்ஸன்.

ஜெர்மன் வீழ்ச்சியைப்பற்றி எல்லோரும் குதூஹலப்படும்பொழுது ஒருவர் மட்டும் அமைதியுடனும், நிம்மதியுடனும் இருக்கிறார். அவர், ஐரோப்பிய அரண் அவருடைய தாக்குதலுக்கு சவால் விடுத்த பொழுதும் கலக்கமடையவில்லை. இந்த உயர்தர கமாண்ட ருக்கு வெற்றியிலுள்ள நம்பிக்கை ஒரு பொழுதும் சஞ்சலமடைந்ததில்லை. அவருடைய சேனைகளிடம் மிலியன் கணக்கான ஜெர்மானியர்கள் சரணடைந்தார்கள் என்பது திட்டப்படி ஏற்பட்டதென்று அவர் நினைக்கிறார், அவர்கள் சரணடைவார்கள் என்றும் அவர் அறிவார்.

1941-ம் வருஷத்தில் ஜெனரல் மார்ஷல் அவரைத் திருப்பி அழைத்தபொழுதே அவருடைய கலக்கமடையாத மனதில் இந்த சம்பவம் எதிர்பார்க்கப்பட்டது. ஜெனரல் மார்ஷல் அவரிடம் பின்வருமாறு சொன்னார். "நீங்கள் ஐரோப்பிய டிவிஷன்களுக்கு தலைமை வகிக்கவேண்டும். நீங்கள் எப்பொழுது புறப்படுகிறீர்கள்?" "நாளைக்காலையிலேயே" என்று அவர் சொன்னார். அந்த நேரம் முதற்கொண்டு அவர் அவருடைய சேவையை மேற்கொண்டார். அந்த வேலை இப்பொழுது பூர்த்தியாகி விட்டது.

இவரைப்பற்றி சரித்திரம் எவ்வாறு சொல்லும். நிச்சயமாக அவர் மிகவும் உயர்வான ஜெனரலென்றும், எதிரியின் கேந்திரஸ்தானங்களைப் பிடித்ததுபோல் ஏராளமான படைகளின் அபிமானத்தையும், விசுவாசத்தையும் அவர் கவர்ந்துவிட்டாரென்றும், வெற்றிகிடைத்த பொழுது இருந்ததுபோல் சிரமமும், கஷ்டமும் நிரம்பியிருந்த காலத்திலும் அவர் அமை தியும், நிம்மதியும் பெற்றிருந்தாரென்றும் சொல்லக்கூடும்.

சரித்திரம் மற்றொரு வியாச்யானத்தையும் எழுதும். அதுதான் அவர் வெற்றிக்குச் செய்த பேருதவி. அநேக நாடுகளிலிருந்து வந்ததும் அநேக ஜாதியார்களைச் சேர்ந்ததுமான துருப்புக்களை அவர் ஒன்று படுத்தி பலமான ஆயுதமாக தயாரித்தாரென்பதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது. இந்த வேலையைக் கண்டு மற்ற ஜெனரல்கள் நடுக்கம் கொண்டு பின்வாங்கியிருப்பார்கள். சச்சரவு சம்பவிக்கக்கூடியதாக இருந்தது. மனஸ்தாபங் கள் நிச்சயமாக இருந்தன.

ஈஸன்ஹவர் தீர்க்கவேண்டிய ராணுவ பிரச்சனையைப்போல் எந்த ஜெனரலுக்கும் சிரமம் ஏற்பட்டதில்லை. மனிதர்களுடன் கலந்து வாழும் பிரச்னையும் முக்கியமாகத் தானிருந்தது. முதல் பிரச்னையை ஈசன்ஹவர் அவருடைய சக்தியைக் கொண்டு தீர்த்தார். இரண்டாவது பிரச்னையை அவருடைய ஆத்ம குணங்களைக் கொண்டு தீர்த்து விட்டார்.

கபடமின்மை, ஒழுக்கம், தாராளம், பேச்சில் ஸௌலப்யம், தெளிவான யோசனை முதலிய குணங்களுடன் ஈசன்ஹவர் நேசதேசத்தாரின் நம்பிக்கைக்கும், ஒத்துழைப்புக்கும்

ஏற்படும் குந்தகங்களை அகற்ற முயன்றார். அவருடைய வெற்றிக்கு ஜெர்மனியின் இறுதி வெற்றிதான் சான்றாகும். சச்சரவுக்கு ஆஸ்பதமான எதையும் அவர் இரக்கமன்னியில் அப்புறப்படுத்திவிடுவார்.

ஒரு அமெரிக்க கர்னல் அவருடைய பிரிடிஷ் சகாவுடன் கடுமையாச் சண்டையிட்டுக் கொண்டார். ஈசன்ஹவர் அமெரிக்கனைக் கூப்பிட்டனுப்பி பின்வருமாறு சொன்னார். "உன்னுடைய கக்ஷி நியாயமானதுதான். நீ பொறுமையை இழந்துவிட்டாய் இது ஞாயம் தான்." நீ பிரிடிஷ் கர்னலை அவதூராகப் பேசினாய் என்று நான் கேழ்விப்படுகிறேன். இதுவும் சகஜம்தான். ஏனென்றால் ஸோல்ஜர்கள் அவர்களுக்குத் தெரிந்த பாஷையைத்தான் உபயோகிப்பார்கள். ஆகிலும் நீ அவரை பிரிடிஷ் இன்னாரென்று அவதூறாகப் பேசியதை நாம் ரஸிக்கவில்லை. ஆகையால் நான் உன்னை பர்த்தரப்பு செய்கிறேன்." அந்த அமெரிக்க கர்னல் அமெரிக்காவுக்குச் சென்று விட்டார்.

அவருடைய ஸ்நேக பாவமும், ஒத்துழைக்கவும், கற்றுக்கொள்ளவும் அவருக்குள்ள ஆவலும், அவருடைய சேனைகள் பூராவும் பரவியிருந்தன. அவருடைய சொந்த வாழ்க்கை சாதாரணமானது. அவருடைய நடை முறையும் அகம்பாவ மற்றதாகவும், மரியாதை உள்ள தாகவுமிருக்கும்.

அவருடைய சரித்திரத்தில் ராணுவ வாழ்க்கைதான் ஸ்வாரஸ்யமானது. அவருக்குக் கிடைத்த உத்தியோக உயர்வு அமெரிக்க சேனை சரித்திரத்திலேயே நிகறற்றது. யுத்த ஆரம்பத்தில் அவர் சாதாரணமான ஒரு கர்னலாக இருந்தார். பொதுமக்களுக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியவராது. இப்பொழுது அவர் சேனைகளின் உயர்தர ஜெனரலாகப் புகழ் பெற்றுவிட்டார்.

பெர்ல் துறைமுகநடவடிக்கைக்கு முன்பே அமெரிக்காவிலிருந்த சேனை வீரர்கள் வாலிபமுள்ள சுறு சுறுப்புள்ள டெக்ஸாஸைச் சேர்ந்த இவர் அதிக முன்னேற்றமடைவார் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். மேற்கு முனையில் 1915-ம் வருஷத்தில் அவருடைய போதகர்களின் ஒருவர் "தலைமை வகிக்க லாயக்குள்ளவர்" என்று ஐக்கைப்பற்றிய ரிப்போர்ட் எழுதினார். அந்த ரிப்போர்ட்டின் உண்மை அடுத்த சில வருஷங்களில் வெளியாயிற்று. 1941-ம் வருஷத்தில் அமெரிக்க சேனை போருக்கு முன் ஒத்திகையாக லூயிஸியானாவில் ஒரு போலிச்சண்டையை நடத்தியது. ஈஸன்ஹவர் நீலச்சேனைக்கு படைத்தலைவர். அவர் திறம்பட சேவைசெய்து வீரர்கள் சொன்ன ஜோஸ்யத்தை நிறைவேற்றிவிட்டார்.

இந்தப்போர் வீரர் அமைதியுள்ள நாட்டுப்புற குடும்பத்தில் உதித்தார். அவருடைய ஐந்து சகோதரர்களும், வியாபாரம், சட்டம், இஞ்சினியரிங், பத்திரிகை முதலிய அலுவல்களில் ஈடுபட்டார்கள். ஐக் மட்டும் இளமையிலே சேனையில் சேர்ந்து கொண்டார். சென்ற யுத்தத்தில் அவர் பென்ஸில்வேனியாவில் டாங்கி பயிற்சி நிலையத்தில் லெப்டினண்ட் கர்னலாக வேலைபார்த்தார். சென்ற யுத்தம் முடிந்த உடனேயே அடுத்த யுத்தத்துக்கு ஹேஷ்யங்கள் காணப்படுகின்றன என்று முடிவுசெய்து கொண்டார். அவருடைய புத்தி சக்தி கிரஹியம் செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு நவீன யுத்த முறையைப்பற்றி அவர் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள ஆரம்பித்தார். மாக்ஆர்தர் பிலிப்பைன்ஸுக்குச் சென்ற பொழுது அவரும்கூடச் சென்றார். மாக்ஆர்தருக்கு அடுத்த அதிகாரியாக அவர் தீவின் தற்காப்புகளுக்கு திட்டங்களை நிறுவினார். மிகவும் மிகுதியாகயிருந்த ஜெர்மன் படைகளும் தற்காப்புகளை ஊடுருவிச் செல்லமுடியவில்லை.

ஐரோப்பாவுக்கு வருமுன் ஈஸன்ஹவர் ஒரு ஸ்நேகிதனிடம் சொன்னார். "இது மிகவும் கடினமான யுத்தமாக இருக்கும். நம்முடைய மற்ற முஸ்தீப்புகளுடன் நான் உறுதியையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்."

அவரும் உறுதியுடன் போரை நடத்தியிருக்கிறார். ஆனால் அது ரோமலின் அசட்டுப் பிடிவாதமல்ல. அவர் முன்னோர்களின் ஐதிகத்தைக் கடைபிடித்தவர். அவருடைய முரட்டுத்தனத்துடன் மனிதவர்கத்தினிடம் தயையும் கலந்திருந்தது. நாஸிக்காவல் முகாம் களைக்கண்டு அவர் அஞ்சின தோற்றங்கள் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. மீட்கப்பட்ட நாடுகளிலுள்ள பசியால்வாடும் ஜனங்களுக்கும் உதவி அளிக்க அவர் செய்த ஏற்பாடுகள் ஐரோப் பாவில் அவருக்கு புகழைத் தந்துவிட்டன. வாசஸ்தலமற்றவர்களிடமும் அவர் அனுதாபம் காட்டிவந்தார்.

நேசதேசத்தார்களின் சேனைகளின் தகுதியுள்ள கமாண்டரென்று அவர் ருஜூச் செய்துவிட்டார். எல்லா தேசத்தார்களின் வந்தனமும் அவருக்கு உரித்ததாகும்.

# தோற்கடிக்கப்படாத கோஷ்டி.

## அலெக்ஸாண்டரும், மாண்ட்காமரியும்.

### (லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

இந்த யுத்தத்தில் பிரிடனில் ஜனித்த இரண்டு பெரிய கமாண்டர்கள் ஒரே சமயத்தில் அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தின் உச்ச நிலமையை அடைந்தார்கள். தெற்கிலுள்ள ஜெர்மன் சேனைகள் பீல்டு மார்ஷல் அலெக்ஸாண்டரிடம் சரண் புகுந்தன. லூனன் பர்க் அருகில் மற்றொரு சரணாகதி ஏற்பட்டது. வடக்கிலுள்ள ஜெர்மன் சேனைகளின் பிரதிநிதியான ஐந்து உற்சாகமிழந்த ஜெர்மன் ஆபீசர்கள் பீல்டு மார்ஷல் மாண்ட்காமரியின் முன்னிலையில் சரணாகதி செய்ததாகக் கையெழுத்திட்டார்கள்.

பீல்டு மார்ஷல்களான அலெக்ஸாண்டரும், மாண்ட்காமரியும் பிரிடிஷ் படையின் டிவிஷன் கமாண்டர்களாக 1939-ம் வருஷத்தில் போரைத்துவக்கினார்கள். இருவரும் படிப் படியாக உத்தியோகத்தில் உயர்ந்து, இப்பொழுது பிரிடிஷ் சேனையிலுள்ள உன்னத பதவியை வகித்து வருகிறார்கள்.

ப்ருடஸைப் போல் அவர்கள் இருவர்களிடமும் மனிதனுக்குடைய சகலவிதமான சிலாக்யமான குணங்களும் காணப்படுகின்றன.

அலெக்ஸாண்டரும், மாண்ட்காமரியும் 1942-ம் வருஷ இலையுதிர்காலத்தில் எகிப்துக்கு வந்து சேர்ந்தார்கள். அலெக்ஸாண்டர் மத்திய கிழக்கு பிரதேசத்திலுள்ள படைகளுக்குத் தலைமை வகித்தார். மாண்ட்காமரி ஆபிரிக்காவிலுள்ள படைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டி யிருந்தது. அப்பொழுது பிரிடிஷாரின் அதிருஷ்டம் குறைவாக இருந்தது. இது தலைவர்களின் குறைவினால் இல்லை. தகுதியான சாமான்கள் இல்லாமலிருந்தது.

படை பலமும், பீரங்கி பலமும் மிகுதியாக உள்ள ஒரு எதிரியைத் தாக்கினார் என்ற புகழ் எந்நாளும் பீல்டு மார்ஷல் வேவல் பிரபுவுக்கு உண்டு. அவர் 30,000 உள்ள ஒரு பிரிடிஷ் சேனையைக்கொண்டு 2,50,000 உள்ள இதாலிய சேனையை அழிக்க முயன்றார். வேவலுக்கு பதிலாக வந்த ஆசின்லக்கும் போதுமான முஸ்தீப்புகள் பெற்றிருக்கவில்லை. ஆகிலும் அவர் படைகளைப் பின்வாங்கி எல் அலாமினில் நிலைத்து நின்றார்.

அதன் பின் அலெக்ஸாண்டரும், மாண்ட்காமரியும் சேர்ந்துவிட்டார்கள். ரோமல் எல் அலாமினில் மற்றொரு முயற்சி செய்து துரத்தியடிக்கப்பட்டான். அப்பொழுது மாண்ட்காமரி முன்னேறித் தாக்கினான். அவனுக்கு படைகளும் புதிய ஆயுதங்களும் உதவிக்கு வந்தன. அவன் ரோமலை 1,500 மைல்கள் ஓடும்படி செய்து டுனிஸியாவுக்கு அனுப்பினான். அலெக்ஸாண்டரும் அவருடைய பொறுப்பை வகித்து வந்தார்.

அப்பொழுது அலெக்ஸாண்டர் ஜெனரல் ஈசன்ஹவருக்கு டெபுடியாக நியமிக்கப்பட்டார். மாண்ட்காமரி அவர் கீழ் வேலை செய்து வந்தார். இப்பொழுதும் அவ்விருவரும் ஒத்து வேலை செய்தார்கள். இந்த கோஷ்டியை ஸிஸிலியிலும், இதாலியின் கால் போன்ற பாகத்திலும் முறியடிக்கக்கூடவில்லை. 1941-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் மாண்ட்காமரி அவருடைய தலைவரிடம் விடைபெற்றுக்கொண்டு இங்கிலாந்துக்கு வந்து ராணுவ சரித்திரத்திலேயே மிகவும் துணிவுகரமாக, டி தினத்தன்று பிரெஞ்சு கடற்கரையில் படைகளை இறக்குவதற்குத் தலைமையை ஒப்புக்கொண்டார்.

இப்பொழுது மாண்ட்காமரிக்கு தனிப்பட்ட முறையில் கியாதி பெருவதற்குப் போதுமான சாதனங்களும் கிடைத்துவிட்டன. ஆகிலும் அலெக்ஸாண்டர் மிகவும் முக்கியமான பங்கெடுத்துக்கொண்டிருந்தார். அவர் அபீனைன் மலைகளில் கெஸ்ஸல்ரிங்கின் படைகளைத் தேக்கிவந்தார். அங்கிருந்து கிரீஸில் ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சிகளையும் அவர் கண் நோக்கிவந்தார்கள்.

பீல்டு மார்ஷல்கள் இருவரும் புகழின் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டார்கள். அவர்களுக்கு இன்னும் அதிகமான வேலையை பிரிடன் தருமென்பதில் ஐயமில்லை.

ஆகிலும் மற்றொருவர் பெயரையும் நாம் சொல்லவேண்டியது தான். சாம்ராஜ்ய காரியாலயத்தின் தலைவரான ஸர் ஆலன்ப்ருக்கைப் போல் அவ்வளவு பொறுப்பை ஒருவரும் வகித்ததில்லை.

மூன்று வருஷங்களாக ஸர் ஆலன்ப்ருக் அபாரமான பொறுப்பை வகித்திருக்கிறார். தற்காப்பு இலாகாவின் ராணுவ ஆலோசகராக அவர் இருந்தார். சேனைத் தலைவர்களின்

சிப்பந்திகளின் கமிட்டியின் தலைவராகவும் இருந்தார். நேசதேசத்தாரின் யுத்த தந்திர வெற்றிக்கு அவர் தான் காரணம்.

வெற்றியைக் குறித்து நாம் குதூகலப்படும் பொழுது நாம் இந்த லோல்ஜர்களிடம் நமது கவனத்தைச் செலுத்தவேண்டும். அவர்கள் பிராசின காலத்திலிருந்த மார்ல்பரோ, வெல்லிங்டனுடன் சம அந்தஸ்து பெறலாயக்குள்ளவர்கள். ஏனென்றால் அவர்களிடம் பொறுமை என்ற அடிப்படையான நற்குணம், நிர்ப்பயமாக முன்னேறித் தாக்கும் உணர்ச்சியும் குடிகொண்டிருக்கின்றன.

முன்னேறித் தாக்கும் உணர்ச்சி தான் தலைவர்களின் சிலாக்கியமான குணம். பொறுமையென்பது நேசதேச சேனைகளை ஒன்று படுத்தி கெட்டிப்படுத்தும் சுண்ணாம்பு. சர்வதேசப் படைகளை ஒருமைப்படுத்தியதில் ப்ருக், மாண்ட்காமரி, அலெக்ஸாண்டருக்கு இணை கிடையாது.

---

# பசிபிக் போரை இறுதிப் போராகச் செய்யவேண்டும்.

## (டைம்ஸ் பத்திரிகை).

ஜப்பானியக் கொள்கையில் காணப்படும் பேத்து மாத்தல்களுக்கும், தந்திரங்களுக்கும் கீழ் உலக ஆதிக்கம் பெறவேண்டுமென்ற மாறுபடாத லக்ஷியம் காணப்படுகிறது. அதற்காகத் தான் முற்போக்காக ஆசியாவிலுள்ள அயல் நாட்டு அக்கரைகள் வெளியேற்றப்படுகின்றன.

ஜப்பானிய சக்கரவர்த்தி புனிதமான தெய்வப்பிறப்பென்றும், உலகம் பூராவையும் ஜப்பான் தான் ஆளவேண்டுமென்ற எண்ணமானது நாஸி ஜெர்மனியிலுள்ள உயர்வான ஜாதிக்கொள்கையைவிட பலமாக ஒப்புக்கொள்ளப்பட்டு வேரூன்றியிருக்கிறது. இந்தக் கொள்கையை நிர்மூலமாக்கி அதற்குப் பதிலாக மற்ற நேசநாடுகளுடன் சமாதானமும், கண்யமுமுள்ள கூட்டாளியாக இருக்கும் முறையை ஜப்பானில் ஸ்தாபிப்பதென்பது மிகவும் கஷ்டமானது. அழுக்கடைந்திருக்கும் தாராளமனப்பான்மையும் சர்வ தேசங்களுடன் ஒத்துழைக்கும் தன்மையுமுள்ள ஜெர்மனியைத் திருத்தியமைப்பது சுலபமானது.

### 75 வருஷ திட்டம்.

75 வருஷங்களாக இப்பொழுது நடைபெறும் போருக்கு ஜப்பான் தயாரிக்கப்பட்டது. மன்னர்களின் கொள்கைகளும் ஜப்பானின் தேசீய ஐதீகத்துக்கு ஒத்ததாக இருந்ததால், நாஸி ஜெர்மனியைப் போல பொதுமக்களின் ஒரு பகுதியைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சில பொது உடமைக்கக்ஷிக்காரர்களைத் தவிர மற்ற எல்லா ஜப்பானியர்களும் யுத்தம் நியாயமானதென்றும், நேசதேசங்களுக்கு நெருக்கடியான சமயத்தில் இருந்த உறுதியைப் போல, ஜப்பானின் வெற்றி நிச்சயமென்றும் நம்பியிருக்கிறார்கள்.

ஆகிலும் ஜப்பான் வெகு காலமாகப் பொறுமையுடன் தயாரித்திருக்கும் கவசத்தில் ஓட்டைகளிருக்கின்றன. முறியடித்த நாடுகளின் ஒத்துழைப்பை ஜப்பான் சம்பாதிக்கவில்லை. ஜப்பானுக்குள்ள மமதையினால் அது பிறரை இரக்கத்துடன் நடத்தவோ அல்லது பிறரின் மனப்பான்மையை அறியவோ அது சக்தி பெற்றிருக்கவில்லை.

ஆகையால் அநேக நாடுகளில் நேசதேசத்தாருக்கு சக்தி வாய்ந்த நண்பர்கள் இருக்கிறார்கள். ஜப்பானைத் துரத்தியடிக்க அவர்களுக்கு ஒத்தாசையும், தேச ஒற்றுமையைப் பெற உதவியும் கிடைத்துவிட்டால் அவர்கள் ஜப்பானை எதிர்த்துப் போராடத்தயாராக இருக்கிறார்கள்.

உண்மையாக, "ஆசியா ஆசியா வாசிகளுக்கே" என்ற ஜப்பானின் மேற்கொள் அதற்கே ஆபத்தாகத் திரும்பிவிட்டது. ஜப்பான் அமைத்த பர்மிய தேசீய சேனையே சரணாகதி செய்து சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொண்டதென்பது ஜப்பான் நாடெங்கும் உண்டு பண்ணியிருக்கும் விரோத மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது.

ஜாதி உயர்வு என்ற ஐதிகத்தை ஜப்பான் சமீப காலத்தில் கோரமான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறது. இந்தக் கொள்கை கிழக்குக்கும், மேற்குக்கும் உள்ள சம்பந்தங்களுக்கு அன்வயிக்காது என்பதை நேசதேசத்தார்கள் நிதர்சனமாகக் காண்பிக்கவேண்டும்.

### சீனாவின் எதிர்ப்பு.

ஜப்பானின் பேராசை பூர்த்தியாவதற்கு முட்டுக்கட்டையாக மலைபோல் அசைவற்றிருந்தது சைனா தான். ஜப்பானுக்கு விரோதமாகப் போர் நடைபெறப்பெற சமாதான முறையில் யுத்த நிறுத்தம் செய்துகொள்ளலாமென்ற ஜப்பானின் எண்ணம் மறைந்துகொண்டேவரும்.

# வைஸ்ராயின் யுத்த அவசியத்துக்கான நிதி.

## மொத்த நன்கொடை 11 கோடி ரூபாய்களுக்கு மேல்.

### ஐந்து கோடி ரூபாய்கள் சிறிய சேமிப்பாளரின் நன்கொடை.

வைஸ்ராயின் யுத்த அவசியத்துக்கான நிதியிலிருந்து சென்ற 5½ வருஷங்களாக இந்தியாவிலும், இங்கிலாந்திலும் யுத்த முயற்சியில் சம்பந்தப்பட்ட எந்த யுத்த தர்மமும் ஸ்தாபனமும் லாபமடையாமல் இருக்கவில்லை. யுத்தம் ஆரம்பித்த உடன் இந்திய சமஸ்தான பிரஜைகளும், இந்திய மன்னர்களும் யுத்த அவசியத்துக்காக நன்கொடை அளிக்கும் பொருளைத் தகுதியுள்ள இடங்களுக்கு அனுப்புவதற்கு வசதி அளிப்பதற்காக 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் இந்த நிதி ஆரம்பிக்கப்பட்டது.

ஆறுவது வருஷத்திலும் அந்த நிதிக்கு இந்தியாவின் அநேக பாகங்களிலுள்ளவர்கள் பொருளைத் தாராளமாகவே கொடுத்து உதவுகிறார்கள். பிப்ரவரி மாத முடிவில் இந்தத் தொகையின் மொத்தம் 11·64 கோடி ரூபாய்க்கு எட்டிவிட்டது. மொத்தத் தொகையில் சமஸ்தான மன்னர்கள், 6·5 கோடி ரூபாய்களை நன்கொடை அளித்திருக்கிறார்கள். முக்கியமான நன்கொடைகள் பின்வருமாறு:—

| சமஸ்தானம். | தொகை ரூ. |
|---|---|
| ஹைதராபாத் ... ... | 190 லக்ஷம். |
| மைசூர் ... ... | 54 ,, |
| நவநகர் ... ... | 26 ,, |
| திருவாங்கூரும், பரோடாவும் ஒவ்வொன்றும் ... | 24 ,, |
| ஜோட்பூரும், குவாலியரும் ஒவ்வொன்றும் ... | 20 ,, |

மன்னர்களின் தாராள நன்கொடை மேன்மேலும் குறைவற்று வந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு வருஷமும் ·39 லக்ஷம் ரூபாய்கள் வந்து கொண்டிருந்தன. இந்த மகத்தான நன்கொடைகள் ஐந்து கோடி மொத்தமுள்ள ஏழை மக்களின் சிறிய நன்கொடைகளை மறந்து விடும்படி செய்துவிடாது. அவர்கள்தான் மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். எனக்கு எவ்வளவுதான் கொடுக்கமுடியும் என்று ஏழை கொடுத்த 2 ரூபாய்களும், ஒரு குழந்தை தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து அனுப்பிய 10 ரூபாயும், இரண்டு தகுதிகளாக ஒரு சேவகர் கொடுத்த 7 ரூபாய்களும் ஏழை மக்களின் தியாகத்துக்கு சில உதாரணங்கள்.

அயல் நாடுகளிலுள்ள இந்தியர்களும் இந்த நிதிக்கு லக்ஷக்கணக்கான ரூபாய்களை நன்கொடை அளித்திருக்கிறார்கள். மேலும் தொகைகளை அனுப்பியும் வருகிறார்கள். சமீப காலத்தில் சாகிடான், மஸ்காட், மெஷெட், அபேடான், கெர்மேன், சான்ஸிபார், காபூல், டெஹரான் முதலிய இடங்களிலிருந்தும், ஆபிரிக்காவிலுள்ள அலிகான் இஸ்மாலியா யுத்த நிதியிலிருந்தும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

எதியோபியாவில் இந்தியரின் க்ஷேமத்தைக் கோருகிறவர்களும், டெஹ்ரானிலும், குவைட்டிலும் உள்ள பாரசீகர்களும், ஸிலோன் வியாபாரச் சங்கமும் சென்ற எட்டு வாரங்களில் அனுப்பியுள்ள தொகைகளைக் கவனித்தால் அயல் நாடுகளில் இந்த நிதிக்கு எவ்வளவு அக்கறை காட்டப்படுகிறது என்பது வெளியாகும்.

இந்த நிதியிலிருந்து நன்கொடையாளர்களின் இஷ்டப்படிக்கும், அப்பீல் கமிட்டியின் யோசனைப்படிக்கும் 10·10 கோடிகள் செலவிடப்பட்டிருக்கின்றன. ஐந்தரை வருடங்களாக யுத்த முயற்சிக்கு இந்த நிதி எவ்வளவு உதவி செய்திருக்கிறது என்பது இதிலிருந்து வெளியாகும்.

துருப்புகளுடைய வசதிக்கும், சாமான் கப்பற்படையினருக்கும், இந்தியாவில் ஸ்திரீகள் சேவைப்படைக்கும் ஏராளமான பொருள்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற 8 மாதங்களில் இந்தியாவின் துறைமுகங்களிலுள்ள சாமான் கப்பற்படையினருக்காக சங்கங்கள், ஸ்தாபனங்கள், பண்டக சாலைகள், மற்ற வசதிகள் முதலியவற்றை அமைக்க 12 லக்ஷம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள பிரிடிஷ் இந்திய விமானப்படை ஆபீஸர்கள், விமானிகளின் உதவிக்காக விமானப்படை தலைமைக்காரியாலயத்துக்கு 6 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடற்படையில் உள்ளவர்களின் க்ஷேமத்தை உத்தேசித்து கடற்படை தலைமைக்காரியாலயத்துக்கு ரூ. 3,25,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தாலியிலுள்ள இந்தியத் துருப்புகளுக்கு ரோம கைக்குட்டைகளையும், கையுறைகளையும் வழங்குவதற்காக 2 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இத்தாலியிலுள்ள துருப்புகளுக்கு உபரியாக தேயிலையும், மற்ற வசதி பாக்கெட்டுகளையும் அனுப்ப 75,000 ரூபாய்கள் செலவிடப்பட்டன. சேவையில் ஈடுபட்ட ஸ்திரீகளுக்காக Y. W. C. A. க்கு 2 லக்ஷம் ரூபாய் அனுப்பப்பட்டது. இவைகளைத் தவிர துருப்புகளின் வசதிக்கு தொகைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

நன்கொடையாளர்கள் உத்தேசம் செய்த இனங்களுக்கும் பொருள் உதவப்பட்டது. பின் கண்ட தொகைகள் பொதுவான தலைமைக்காரியாலயத்தின் வெல்பேர் டிரக்டரேட்டுக்கு அனுப்பப்பட்டன.

வசதிகளுக்காக பொருளைக் கொடுத்ததுடன் பின்கண்ட இனங்களுக்கும் தொகைகள் கொடுக்கப்பட்டன.

| இனம். | தொகை ரூ. (லக்ஷக்கணக்கில்). |
|---|---|
| பிரிடிஷ் விமானப்படை | 252·94. |
| இந்திய செஞ்சிலுவை, செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் அஸோஸியேஷன் | 257·18. |
| இந்தியத் தற்காப்புக்காக யுத்த தளவாடங்கள் | 52·27. |
| சுரங்க வெடிகளை வாரும் கப்பல்கள், மற்ற படகுகளுக்காக இந்தியக் கடற்படைக்கு | 38·90. |
| ஐரோப்பாவிலுள்ள இந்திய யுத்தக் கைதிகளுக்கு பார்சல்களை அனுப்பவும் இங்கிலாந்திலுள்ள இந்தியத் துருப்புகளுக்கும், மாலுமிகளுக்கும் வசதி அளிக்கவும் லண்டனிலுள்ள இந்திய சௌகர்ய நிதிக்கு | 10·68. |
| விமானத்தாக்குதலால் ஏற்பட்ட கஷ்ட நிவாரணத்திற்காக லண்டனின் மேயர் நிதிக்கு | 20·76. |

சைனா, கிரீஸ், ரஷ்யா, பர்மா போன்ற நேசதேச நாடுகளில் உள்ள கஷ்ட நிவாரணத்திற்காகவும் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்த நிதியின் ஒரு பகுதியான செயிண்ட் டன்ஸ்டனின் நிதியில் 1945-ம் வருஷம் பிப்ரவரி 28-ல் 19,50,000 ரூபாய் இருந்தது. அந்த நிதி யுத்தத்தில் கண்ணிழந்தவர்களுக்கு உதவி செய்யக்கூடியது. இங்கிலாந்திலுள்ள செயிண்ட் டனஸ்டன் நிதிக்கு 11,50,000 ரூபாய் அனுப்பப்பட்டது. டேராடூனில் செயிண்ட் டன்ஸ்டன் நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக 7 லக்ஷ ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையம் ஒரு முக்கியமான தேவையைப் பூர்த்தி செய்திருக்கிறது. யுத்தத்தினால் கண்ணை இழந்த இந்தியர்களுக்கு அது உபயோகமுள்ள சேவையைச் செய்து வருகிறது.

இந்திய மாலுமிகள், சோல்ஜர்கள், விமானிகளின் சங்கங்களும், இந்திய விமானப்படை கடற்படையின் தனிப்பட்ட உதவி நிதிகளும், முடமாக்கப்பட்ட போர்ப்படையினருக்கும், உயிரிழந்தவர்களின் சுற்றத்தார்களுக்கும் கஷ்ட நிவாரணம் செய்து வருகின்றன. அவைகளைப்பற்றிய தகவல்களை நிதியின் எஞ்சிய பாகம் யுத்த முடிவில் வினியோகம் செய்யப்படும்போது அறிவிக்கப்படும். இந்தப் பாக்கி நிதியை சோல்ஜர்களின் புனருத்தாரணம், அவர்களுடைய குழந்தைகளின் கல்வி முதலிய யுத்தத்துக்குப் பிந்திய உலக சீர்திருத்த திட்டங்களில் ஈடுபடுத்துவார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 249. (2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 28- 5-45 | புத்தாம்பூர் | ... மாலை 7.00 | 31- 5-45 | கொன்னையூர் | ... மாலை 7.00 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, 7.30 | ,, | மேலவேகுப்பட்டி | ... ,, 7.30 |
| 29- 5-45 | வடவாளம் | ... ,, 7.00 | 1- 6-45 | மலம்பட்டி | ... ,, 7.00 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, 7.30 | ,, | பேராம்பூர் | ... ,, 7.30 |
| 30- 5-45 | நச்சாந்துபட்டி | ... ,, 7.00 | 2- 6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | விராச்சிலை | ... ,, 7.30 | 3- 6-45 | ஆலங்குடி | ... ,, 7.00 |
| | | | ,, | ராசியமங்கலம் | ... ,, 7.30 |

### பிரஸங்கம் 250 (3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4- 6-45 | திருமெய்யம் | ... மாலை 7.00 | 7- 6-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... மாலை 7.00 |
| ,, | ராமச்சந்திரபுரம் | ... ,, 7.30 | ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, 7.30 |
| 5- 6-45 | புலியூர் | ... ,, 7.00 | 8- 6-45 | பள்ளிவாசல் | ... ,, 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, 7.30 | ,, | பில்லமங்கலம் | ... ,, 7.30 |
| 6- 6-45 | அன்னவாசல் | ... ,, 7.00 | 9- 6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | கிழக்குரிச்சி | ... ,, 7.30 | 10- 6-45 | கீரப்பழனி | ... ,, 7.00 |
| | | | ,, | ஆலூர் | ... ,, 7.30 |

**யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.**

| | | | |
|---|---|---|---|
| 29—5—45 | பேராம்பூர். | 5—6—45 | வடகாடு. |
| 30—5—45 | காம்பக்குடி. | 6—6—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 31—5—45 | கீழாநிலை. | 7—6—45 | ஆலங்குடி. |
| 1—6—45 | புதுக்கோட்டை. | 8—6—45 | புதுக்கோட்டை. |
| 2—6—45 | வெட்டம்விடுதி. | 9—6—45 | திருமயம். |
| 3—6—45 | மருதன்கோன்விடுதி. | 10—6—45 | ஏம்பல். |

# விசேஷ அறிக்கை.

**இந்தியாவின் எதிர்காலம் அதனுடைய போர்ப்படைகளைப் பொருத்தது. மகத்தான அலுவல்களைச் செய்ய லாயக்குள்ளதாக அவற்றை வளர்ச்சிக்க நீங்கள் உதவி செய்யவேண்டும். இந்தியா பலமான திறமையுள்ள நவீன சேனையைப் பெற்றிருக்கவேண்டும். உலகப் பிரசித்தி பெற்ற பெருமைவாய்ந்த ஜநிகங்களை ஏற்படுத்தியிருக்கும், இந்தச் சிறந்த போர் வீரர்களுக்கு நாயகம் வகிக்கக்கூடிய சிலாக்கியமான ஆபீஸர்கள் இந்த சேனைக்கு போதுமான அளவு இருக்கவேண்டும்.**

*சேவையின் உபயோகத்தையும், பெருமையையும் தவிர இந்திய சேனையில் அவர்களுக்குக் கிடைக்கும் பயிற்சியும், அனுபவமும் இந்தியாவிற்கும், சேனையிலிருந்தாலும் சரி, அல்லது உத்யோகத்துக்கும், தொழிலுக்கும் சென்றாலும் சரி, தனிப்பட்டவருக்கும் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும்.*

*மற்றும் மூன்று அம்சங்கள்:*—யுத்தத்துக்குப் பின் சேனையில் சேவை செய்ய பிரியப்படுகிறவர்களுக்கு 'இதற்கு முன் சேர்ந்துகொள்ள வில்லையே' என்ற விஷயம் சாதாரணமாக கமிஷன் பெறக்கூடிய சாதகங்களுக்கு குந்தகம் விளைவிக்காது. ஏனெனில் சாதாரணமான ஆபீஸர்களின் அந்தஸ்து வயதுக் கிரமப்படி எல்லோருக்கும் சமமாக வழங்கப்படும்.

*பொதுஜன வாழ்க்கைக்குத் திரும்ப பிரியப்படுகிறவர்களுக்கு போர்ப் படையில் சேவை செய்தவர்களுக்கு அரசாங்கத்தார் ஒதுக்கி வைத்திருக்கும் ஸ்தாபனங்களைப் பெற அநேக சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும்.*

*போர்ப் படைகளிலிருந்து திரும்பிவரும் மாஜி மாணவர்களுக்கு படிப்பை பூர்த்தி செய்ய சர்வகலாசாலைகள் தாராளமான சலுகைகளைக் காட்டுவதாக முடிவு செய்திருக்கிறார்கள். விவரங்களை உன்னுடைய சர்வகலாசாலை அதிகாரிகளிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.*

**நீங்கள்தான் இந்தியாவின் வாலிபமுள்ள ஆடவர்கள். உங்கள் கையில் தான் இந்தியாவின் எதிர்காலம் இருக்கிறது. இந்திய சேனைக்கு வாலிபமும், படிப்பும், தேசாபிமானமும் உள்ள இந்தியர்கள் தேவை. அதாவது உங்கள் போன்றவர்கள் தேவை.**

*பூரா விவரங்களும் கீழே கண்டவரிடமிருந்து அறிந்து கொள்ளப்படலாம்:*—

உன்னுடைய சர்வகலாசாலை அல்லது கலாசாலையின் காரியதரிசி
அல்லது ரெக்ரூடிங் ஆபீஸர்.

*பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.*

*அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.*

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—30-5-45.